




# திருக்கோயில்

ஏப்ரல் 1988 ரூ. 3







அண்ணாநகர் அருள்மிகு மாகாளியம்மன் திருக்கோயில் திருப்பணித் தொடக்கவிழா 6-3-88 அன்று அறநிலையத்துறையின் ஆணையாளர் திரு தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திரு கு.ஆளுடையபிள்ளை,ஐ.ஏ.எஸ்., திருப்பணியைத் தொடக்கி வைத்தார்கள். அறநிலையத்துறையின் தலைமைத் தணிக்கை அதிகாரி திரு வி. வீரபத்திரன், பி.எஸ்சி., துணை ஆணையாளர் திரு ந.ச. இராமச்சந்திரன், பி.ஏ.பி.எல்.,நிர்வாக அதிகாரி என்.கணேசன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

முகப்பு: திருவாரூர் அருள்மிகு தியாகராஜப் பெருமான், அருள்மிகு கமலாம்பிகைத் தாயாரின் வண்ண ஓவியங்கள் இவ் விதழ் முகப்பை அலங்கரிக்கின்றன.

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை : 30 | திருவள்ளுவர் ஆண்டு 2019 விபவ ஆண்டு சித்திரைத் திங்கள் ஏப்ரல் 1988 விலை ரூ. 3-00 | மணி : 4

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை-600 034.**

என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தா தாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| அரை ஆண்டு | — ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — ரூ. | 36-00 |
| ஆயுள் | — ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

வல்லக்கோட்டைக்கு வர மறந்தனையோ? —செவ்வேள்

திருக்கோயில் பொருந்த ஓர் செங்கல் இடுவார் உலகாள்வார் —நிறைமதி

திருவாரூர்த் திருத்தலப் பெருமை —வித்யாதீர்த்ததாசன்

பக்தகுசேலர் —வே. தியாகராஜன்

அறம் தழைக்கும் ஆமாத்தூர் —புலவர் தி.மு. சங்கரலிங்கம்

சொர்க்கமும் நரகமும் —சுவாமி சிவானந்தர்

வீரவனநாயகன் —விசாகன்

கந்தவேள் கருணை —திருமுருக கிருபானந்தவாரியார்.

பாரதப்போரில் பார்த்தசாரதி —டாக்டர் த. அமிர்தலிங்கம்.

### தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்து

**திருக்கோயில் வாசகர்களுக்கு எங்கள் தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# வல்லக்கோட்டைக்கு வர மறந்தனையோ?

**செவ்வேள்**

தைத்திங்கள் கிருத்திகை நன்னாள், தமிழரசு அச்சகத்தில் அமர்ந்து திருக்கோயில் இதழ்ப்பணிகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது தமிழரசு அச்சகத்தில் பணிபுரியும் அருமை நண்பர்கள் இராமானுஜம் மற்றும் சூரியநாராயணன் இருவரும் என்னிடத்தில் வந்து ''நாங்கள் இப்பொழுது வல்லக்கோட்டைக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நீங்களும் வருகிறீர்களா?'' என்று கேட்டார்கள்.

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்''

என்று திருநாவுக்கரசர் பாடியிருப்பதற்கு ஒப்பவே நானும் முன்னமே வல்லக்கோட்டை வள்ளிமணாளன் பேரையும், அவன் சிறப்புகளையும் கேள்விப் பட்டிருந்தேன். ஆனால் என்னை ஆற்றுப்படுத்துவாரும், அழைத்துச் செல்வாரும் இல்லாத காரணமோ என்னவோ வல்லக்கோட்டைமுருகனை நான் அன்றுவரை காணக் கொடுத்துவைக்கவில்லை.

ஆகவேதான் நண்பர்கள் இராமானுஜமும், சூரியநாராயணனும் என்னை அழைத்தவுடனே நானும் அவர்களுடன் வல்லக்கோட்டைக்குஉடனே புறப்பட்டு விட்டேன். நாங்கள் அச்சகத்தை விட்டுக் கிளம்பியபோது மணி சுமார் மூன்றிருக்கும். '18வி-ஐப் பிடித்து தாம்பரம் போய்விட்டால் அங்கிருந்து அடிக்கடி வல்லக்கோட்டைக்குப் பேருந்துகள் உள்ளன. இன்றைக்குக் கிருத்திகை ஆதலால் விசேடப் பேருந்துகளும் விடப்பட்டிருக்கும். ஆகவே வல்லக்கோட்டைக்கு விரைவில்போய் சேர்ந்து விடலாம்' என்றார் இராமானுஜம். மேலும் அவர் சொல்லுகையில் 'நான் என் சகோதரர் சொல்லியதன் பேரில் கிருத்திகைதோறும் வல்லக் கோட்டைக்குப்போய் முருகனைத் தரிசித்து வருகிறேன். கடந்த 2 மாதங்களாகவே என் மனமும் வாழ்வும் முன்பிருந்ததைவிட மகிழ்ச்சியாகவும் செழுமையாகவும் இருந்து வருகிறது. ஐந்து கிருத்திகைகள் தொடர்ச்சியாக வல்லக்கோட்டைக்குப் போக எண்ணியிருக்கிறேன். இது மூன்றாவது கிருத்திகை, நீங்களும் பாருங்களேன். ஒரு முறை வந்தார்க்கு குறை விலகும். இருமுறை வந்தார்க்கு குலம் விளங்கும்; மும்முறை வந்தார்க்குப் புகழ் விளங்கும், பன்முறை வந்தார்க்கு முருகன் மலர்ப் பதம் கிடைக்கும் என்ற ஆன்றோர்கள் வாக்கிற்கிணங்க நீங்களும் பலவளங்களும் நலங்களும் பெறுவீர்கள்'' என்று கூறினார்.

நாங்கள் எல். ஐ. சி. க்கு அருகே இருக்கும் பேருந்து நிறுத்தத்தில் தாம்பரம் போக 18விக்குக் காத்திருந்தோம். ''இப்போதுதான் ஒரு 18வி போனது. நீங்கள் வல்லக்கோட்டைக்குத் தானே போக வேண்டும். இதோ இந்தக் காஞ்சிபுரம் செல்லும் பேருந்தில் ஏறி ஒரகடத்தில் இறங்கிக் கொண்டால் அங்கேயிருந்து நடந்தேகூட கோயிலுக்குப் போய்விடலாம். அப்படி நடக்க வேண்டாம் என்றாலும் செங்கற்பட்டிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் செல்லும் வண்டிகள் எல்லாம் வல்லக் கோட்டை வழியாகத்தான் போகிறது. நீங்களும் ஒரகடத்தில் அந்தப் பேருந்துகளில் ஏறிக்கொண்டு விடலாமே!'' என்று அறிமுகமில்லாத நண்பர் ஒருவர் எங்களை ஆற்றுப்படுத்த அதை நண்பர் இராமானுஜமும் ஆமோதிக்க, நாங்களும் காஞ்சிபுரம் பஸ்ஸிலேயே ஏறி ஒரகடத்தில் இறங்கிக் கொண்டோம். ஒரகடத்தில் அதிகநேரம் நாங்கள் காத்திருக்க அவசியமில்லாமலே வல்லக்கோட்டை வழியாகச் செல்லும் ஸ்ரீபெரும்புதூர் பேருந்து வந்துவிட நாங்களும் ஏறிச் சென்னையிலிருந்து புறப்பட்ட சுமார் ஒன்றரைமணி நேரத்திற் குள்ளேயே வல்லக்கோட்டையை அடைந்து விட்டோம்.

ஒரகடத்திலிருந்து வல்லக்கோட்டை செல்லும் வழியெங்குமே பசுமை நிறைந்த வயல்களையும், நிழல் தரும் மரங்களையும், வீசிய மெல்லிய பூந்தென்றல் காற்றினையுமே அனுபவித்து வந்த எங்களுக்கு வல்லக்கோட்டை கிராமத்தின் இயற்கை எழில் மிகுந்த குதூகலத்தை உண்டாக்கியது. கிருத்திகை ஆதலால் முருகனைக் காண அடியார்த் திருக்கூட்டம் மிக அதிகமாகவே வந்திருந்தது. என்றாலும் பக்தர்கள் எவரிடமும் 'வந்தோமா! நெருக்கியடித்துச் சாமி கும்பிடுவோமா' என்ற பரபரப்புச் சிறிதும் இல்லை. வல்லக்கோட்டையிலேயே தங்கி முருகனைப் பலநாட்கள்தொடர்ந்து வழிபட்டால் என்ன என்பதைப் போன்ற பக்தி உணர்வே அனைவரையும் ஆட்கொண்டுவிட பக்தர்கள் எல்லோரும் பக்திமயமாகிக் காட்சியளித்தார்கள்.

ஆலயம் மிகச் சிறிய ஆலயமே. எதிரிலேயே வஜ்ஜிரத் தீர்த்தம் என்னும் திருக்குளம். இந்திரன் தன் வஜ்ஜிராயுதத்தால் இத் தீர்த்தத்தை உண்டாக்கி முருகனுக்கு அபிஷேகம் செய்து வழிபட்டு இருக்கிறான். வஜ்ஜிரத் தீர்த்தம் முருகன் திருவருள் போலவும், பழநி பஞ்சாமிர்தம் போலவும் தித்திக்கிறது. சுற்றுச் சுவர்கள் இன்றிக் காட்சியளிக்கும் இத்திருக்குளத்திற்கு விரைவிலேயே மிகச் சிறந்த முறையில் திருப்பணிகள் நிறைவேறிவிடும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார் இவ்வாலயத்தின் முன்னாள் அறங்காவலரான திரு பெருமாள். கோயிலுக்கு பக்கத்திலேயே இருக்கிறதாம் இவருடைய வீடு. திருக்கோயில் இதழுக்காக நாங்கள் வந்திருக்கிறோம் என்பதைக் கேட்டவுடன் இவரே சிறந்த முறையில் எங்களுக்கு சுவாமி தரிசனம் செய்து வைத்தார். ஏழடி உயர முடன் வள்ளி தேவானை ஆகிய இருதேவியரும்

புடைசூழ வல்லக்கோட்டை முருகன் நமக்குவந்த கேட்டை-இனி வரும் கேட்டை நீக்குவதற்காகவே புன்னகை புரியும் திருக்கோலத்தோடு காட்சிதருகிறான். முருகனின் அபயம் அருளும் வலது திருக்கரத்தில் பெருவிரல் நம்மை அருகாக அழைப்பது போல் நீண்டு அமைந்திருப்பது அவன் சந்நிதியில் நிற்கும்போது நம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறது. இவ்வளவு உயரமான முருகப் பெருமானின் திருவடிவத்தை சுவாமிமலை, சேலம் கந்தாஸ்ரமம் போன்ற ஓரிரு ஆலயங்களில்தான் நாம் காண முடியும். சுவாமியின் கருவறையில் ஓரடிக்கும் உயரமான கல்ஒன்று போடப்பட்டுள்ளது. இந்தக் கல்லில் நின்று கொண்டால்தான் சுவாமிக்கு அபிசேகம் செய்ய முடியும் என்பதைக் குருக்கள் தெரிவித்தார்.

வல்லக்கோட்டை முருகனின் சந்நிதியில் ஐந்துவித எண்ணெய்களைக் கலந்து தீபம் ஏற்றுவது ஒரு விசேடமாம். வேப்பெண்ணைய், இலுப்பை எண்ணெய், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய ஐந்து எண்ணெய்களையும் கலந்து விளக்கேற்றுவதனால் அதைச் சுவாசிப்பவர் வாதம், பித்தம்,சிலேத்துமங்கள் மூன்றும் சமனாகி உடல் நலம் பெறுவர் என்பது ஆன்றோர்கள் நமக்குத் தெரிவித்திருக்கும் மருத்துவக் குறிப்பாகும். முக்கியமாக கற்கோயில்களில் இவ்ஐந்தெண்ணெய் விளக்குகளின் ஒளிப்பிழம்பின் பிரதிபலிப்பால் தெய்வீக ஆகர்ஷண சக்தி மிகுந்தபலன் அளிக்கும் என்று சான்றோர்கள் தெரிவித்துள்ளதைக் கொண்டு வல்லக்கோட்டை திருமுருகன் சன்னிதியிலும் ஐந்தெண்ணெய் தீபங்கள் ஏற்றி வைக்கப்படுவது விசேடம் என்றார் அர்ச்சகர். ஆலயத்தில் பக்தர்கள் வழங்கும் ஐந்தெண்ணெய் காணிக்கையை பெற்றுக் கொள்ள ஒரு பாத்திரத்தையும் வைத்திருப்பதால் தங்கள் இருண்ட வாழ்வில் ஒளியை வேண்டும் பக்தர்கள் அப்பாத்திரத்தில் ஐந்தெண்ணெய்களைக் காணிக்கையாகச் செலுத்தலாம்.

ஐந்தெண்ணெய் விளக்கொளியில் வள்ளி தேவானையருடன் பிரகாசிக்கும் வல்லக்கோட்டை முருகன், அடியார்கள் வேண்டுவதனைத்தும்வேண்டியவாறே வழங்கிடும் வள்ளல் பெருமான்ஆவார். பிரமனின் ஆணவம் அகல அவன் தலைகள் நான்கில் பன்னிரண்டு கரங்களாலும் குட்டிய வடிவேல் பெருமான், பகீரதன் என்னும் மன்னனின் ஆணவத்தையும் இத்தலத்தில் வீற்றிருந்து அகற்றியருள் பாலித்துள்ளார் என்பதும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய அற்புத வரலாறாகும்.

பகீரதன் என்ற மன்னன் சலம்கொண்டபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலஞ்சி எனும் நாட்டை ஆண்டு வந்திருக்கிறான். தான் என்ற அகம்பாவத்தால் இவன், இவனுடைய நாட்டிற்கு நாரதர் வருகை தந்தபோது அவரை மதியாமல் பாராமுகமாக நடந்து அலட்சியப்படுத்தி இருக்கிறான். பகீரதனுக்குப் பாடம் புகட்ட விரும்பிய நாரதர், அப்பொழுது திக்விஜயம் புரிந்துகொண்டிருந்த கோரன் என்ற அரக்கனை உசுப்பி 'பகீரதனை வென்றால்தான் உன் திக்விஜயம் பூர்த்தியாகும்' என்று கூறியிருக்கிறார். அசுரனுடன் நடந்த போரில் பகீரதன் தோற்றுத் தன் செல்வம் எல்லாம் இழந்து வனத்திற்கு ஓடி, வசிட்ட முனிவரை வணங்கித் தன் துன்பத்திற்கான காரணத்தைத் தெரிந்து கொண்டான். பிறகு அவருடைய அறிவுரையின் படியே துர்வாச முனிவரைப்பணிந்து வணங்க, அவர்கூறிய அறிவுரையின்படியே சுக்கிரவார விரதம் இருந்து பாதிரிமரத்தின் கீழ் முருகப் பெருமானை நோக்கிப் பகீரதன் கடுந்தவம் புரிந்துள்ளான். பகீரதனுக்கு முருகப்பெருமான்



திருவருள் புரியவே கோரன் என்ற அசுரன், தான் வென்ற நாட்டை பகீரதனுக்கே திரும்ப ஒப்படைத்து உள்ளான். தன் அரசை மீண்டும்பெற்ற பகீரதன் ஒரு கோட்டையை அமைத்து முருகப் பெருமானை வள்ளி தெய்வயானையருடன் எழுந்தருளச் செய்தான். வல்லவன் ஆன பகீரதன் கோட்டை கட்டி ஆலயம் அமைத்ததால் இவ்வூர் 'வல்லக்கோட்டை' ஆயிற்று எனவும் அக்கோட்டையின்கண் முருகப்பெருமான் கோயில்கொண்டதால் 'கோட்டை நகர்' என்று அழைக்கப் பெற்று, பிறகு 'கோடை நகர்' எனவும் மருவி அழைக்கப்பட்டதாகவும் இவ்வாலய வரலாற்றை நாம் அறிந்து மகிழ்கிறோம்.

அருணகிரிநாதரின் 8 திருப்புகழ்ப்பாக்களைப் பெற்றது இத்திருத்தலம் என்பதும் இங்கு நாம் நினைந்து போற்றத்தக்கது. கோடை நகர்எனவே இத்திருத்தலத்தை அருணகிரிநாதர் குறிப்பிட்டுள்ளார். திருப்போரூர் முருகனைத் தரிசித்து விட்டுத் திருத்தணி செல்லும் வழியில் அருணகிரிநாதர் ஓரிடத்தில் படுத்திருந்தபோது 'வல்லக் கோட்டைக்கு வர மறந்தனையோ?' என்று முருகப் பெருமான் வினவ, அதற்குப் பிறகே இப்படி ஒரு திருத்தலம் இருப்பதை அருணகிரிநாதரும் மற்றவரிடம் கேட்டு அறிந்து வல்லக்கோட்டை வந்து முருகனைத் திருப்புகழ்களால் பரவியிருக்கிறார்.

ஒரு காலத்தில் கோட்டையும் அதைச் சுற்றிலும் அகழியுமாக சிறந்திருந்த இந்த ஆலயம் காலமாறுபாடுகளினால் பராமரிப்பார் இன்றிச் சிறிய ஆலயமாகத் திகழ்கிறது. அருணகிரிநாதர் காலத்திலும் இவ்வாலயம் பிரசித்தி பெறாமல் இருந்த காரணத்தினால் தானே முருகப்பெருமானே அவருக்கு 'வல்லக் கோட்டைக்கு வரமறந்தனையோ' என்று நினைவுபடுத்த வேண்டியிருந்தது.

*1983*-ஆம் ஆண்டு மார்ச் திங்கள், வல்லக் கோட்டை முருகன், காலமெல்லாம் 'கடவுள் இல்லை இல்லவே இல்லை' என்றுக் கூறிக்கொண்டிருந்த ஒரு நாத்திகரைத் தடுத்தாட்கொண்டதுமல்லாமல் அவரைக் கொண்டே தம் ஆலயத்தின் மகிமையை ஞாலம் அறியச் செய்து கொண்டிருப்பதும் ஒரு வியத்தகு வரலாறாகும்.

இலங்கைத் தூதரக அலுவலகத்தில் மக்கள் தொடர்பு அதிகாரியாகத் தற்போது பணியாற்றி வரும் திரு எம். வி. அரங்கநாதன் தம் இளமைக் காலம் முதலே தீவிர நாத்திகவாதியாக இருந்து கடவுள் உண்மையை மறுத்து வந்திருக்கிறார். பிறகு இவருக்கு வாழ்வில் ஏற்பட்ட பல சோதனைகளால் தெய்வ உண்மையை உணர்ந்து தம் முந்தைய வாழ்விற்குப் பரிகாரம் தேடும் வகையில் தாம்பரம் இறைபணி மன்றத்துடன் தம்மை இணைத்துக்கொண்டு திங்கள்தோறும் முருகனுடைய திருத்தலங்களாகக் கண்டு தரிசித்துவந்த போதுதான் 1983-வது வருடம் மார்ச் மாதம் முன்னிரவு வேளையில் வல்லக்கோட்டைக்கு வந்திருக்கிறார். அப்பொழுது ஆலய அறங்காவலர்கள் இத்தலத்தின் சிறப்பினையும் இன்றிருக்கும் நிலையையும் கூறக் கேட்ட இவர் முருகப் பெருமான் சந்நிதியில் 'முருகா! உன் அருள் இருந்தால் நான் முழுமையாக உன் திருப்பணியில் ஈடுபடுவேன்' என்று உறுதி மேற்கொண்டு அவ்வாறே 'வல்லக்கோட்டைக்கு வரமறந்தீரோ' 'வல்லக்கோட்டைக்கு வர மறந்தீரோ' எனத் தாம் சந்திக்கும் இறையடியார்களிடமெல்லாம் வல்லக்கோட்டை முருகனின் பெருமையை எடுத்துக் கூறி ஆற்றுப்படுத்தி வருகிறார் இம்மெய்யன்பர். இவருடைய முயற்சியினால்தான் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் 'கோடை நகர்த் திருப்புகழ்' நூலும், 'கோடைநகர்த் தலபுராணம்' நூலும் வெளியிடப்பட்டு இருக்கிறது. இன்னும் பலஅறப் பணிகளில் ஈடுபட்டு, வல்லக்கோட்டை முருகனின் திருப்பணிகளை ஊக்கப்படுத்திவரும் இவர் 'அவனருளால் அவன்தாள் வணங்கி, அவன் இடும்பணிகளையே செய்து வருவதாகக் கூறும் தன்னடக்கம் அனைவரும் பின்பற்ற வேண்டிய ஒன்று.

வல்லக்கோட்டை முருகன் சந்நிதிக்கு வலப்புறத்தில் விநாயகர் சந்நிதியும் இடப்புறத்தில் திரிபுரசுந்தரி அம்மன் சந்நிதியும் அண்மைக் காலங்களிலே அமைக்கப்பட்டு ஆலயம் வளர்ந்து வருவதும் வல்லக்கோட்டை முருகனின் மகிமையைக் கண்கூடாக நமக்குக் காட்டும் அற்புத வரலாறுகளாகும். அதில் திரிபுரசுந்தரி அம்மன் சந்நிதி வல்லக்கோட்டையில் உண்டான வரலாற்றை விவரித்தார், நமக்கு அம்மனையும் சிறப்பாக தரிசனம் செய்து வைத்த முன்னாள் அறங்காவலர் திரு பெருமாள். சென்னை நகரில் குடியிருக்கும் திருமதி பத்மினி சிவசுப்பிரமணியம் சக்தி உபாசகர். இவர் அம்பாள் ஆலயங்களுக்குச் சென்று அம்பாளை வழிபடுவாரே தவிர மற்ற ஆலயங்களுக்குச் செல்ல மாட்டார். அவரிடம் வல்லக்கோட்டை முருகனின் பெருமைகளைக் கூறி, வல்லக்கோட்டைக்கு வர அழைத்துள்ளனர் இறையன்பர்கள் பலர். அம்மையாரோ வல்லக்கோட்டைக்கு வந்து முருகனை வணங்கிட மனம் விரும்பாமல் இருந்தபோது, அம்பாளே ஓர் நாள் அருள்வாக்காக 'வல்லக்கோட்டை எனக்கு உகந்த தலமே. சென்று முருகனை வழிபடுக' என்று கூறிய பிறகு திருமதி பத்மினி சிவசுப்பிரமணியமும் வல்லக்கோட்டைக்கு வந்து முருகனை வணங்கியிருக்கிறார். ஒருமுறை வரவே தயக்கமும் மயக்கமும் கொண்டவர் அம்பாளின் உத்திரவு பெற்ற பிறகு கிருத்திகைதோறும் தவறாமல் வல்லக்கோட்டைக்கு வந்து வழிபட்டுக் கொண்டிருந்த போதுதான் அந்த அம்மையார் தம் வீட்டில் வைத்து வழிபட்டுக் கொண்டிருந்த அம்பாளின் திருமேனியை வல்லக்கோட்டை முருகனின் ஆலயத்திற்கே கொண்டு வந்து வைத்துவிடும்படியும் அம்பாள் அருள் வாக்களித்தாள். ''என் மைந்தன் முருகனின் தலத்திலேயே நானும் கோயில் கொள்கிறேன். உன் வீட்டிலிருக்கும் என் திருமேனியை வல்லக்கோட்டைக்குக் கொண்டுபோய் பிரதிஷ்டை செய்துவிடு'' என்று அந்த அம்மையாரிடம் அம்பாள் அருள் வாக்கிலும் கனவிலும் கூற, அதற்குப் பிறகே 'முருகனின் தனி ஆலயத்தினுள் அம்பாளுக்குத் தனிச் சந்நிதி அமைத்து பிரதிஷ்டை செய்யலாமா?' என்கிற ஐயத்தையும் காஞ்சி ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளிடம் விண்ணப்பித்து ஆலயத்தினர் உத்திரவு கோரியுள்ளனர். சங்கராச்சாரிய சுவாமிகளும் 'அம்பாளின் திருவுளமே முருகப் பெருமானின் திருவுளம். இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்ததே புனிதமானது. முருகனின் ஆலயத்தில் அம்பாளைப் பிரதிஷ்டை செய்யுங்கள்' என்று அருளுரை அளித்ததற்கு ஒப்பவே அம்மனை இங்கே கோயில் கொள்ளச் செய்தோம் என்று பெருமாள் நமக்கு விவரிக்க, நாங்களும் முருகனின் திருவருளையும், அம்பாள் அருட்கருணையையும் எண்ணி எண்ணி நெஞ்சு நெகிழ்ந்து நெக்குருகிப்போனோம்.

வல்லக்கோட்டை முருகனின் அருள் விளையாடல்கள் இதுபோல் இன்னும் எத்தனை எத்தனையோ நடந்து இருக்கின்றன. பாம்பாக வந்து இன்னொரு முன்னாள் அறங்காவலரான முனுசாமி அவர்களிடம் விளையாடி இருக்கிறார் வல்லக்கோட்டை முருகப்பெருமான். குளக்கரையில் ஒரு நாள் முழுதும் ஒரே இடத்தில் படமெடுத்து ஆடி நின்றிருக்கிறது நாகம் ஒன்று. பக்தர்கள் அனைவரும் பால் ஊற்றிச் சூடமும் கொளுத்தி நாகத்தை 'முருகனே வந்தான்' என நம்பிக்கையோடு வழிபட்டுள்ளனர். முனுசாமி மட்டும் 'நாளை காலையும் நான் கோயிலுக்கு வரும்போது இந்த நாகம் இங்கேயே இருந்தால் இதனை முருகன் என ஒத்துக் கொள்வேன்' எனக் கூறி இருக்கிறார். மறுநாள் காலையில் அவர்வந்து பார்த்தபோது குளக்கரையில் நாகம் இருக்கவில்லை. 'பார்த்தீர்களா! நேற்று வந்தவன் முருகன் அல்லன்' என்று கூறிவிட்டு முனுசாமி தன் வீட்டிற்குள் நுழைந்திருக்கிறார். 'நான் வந்ததையா இல்லை என்று சொல்கிறாய்' என்று கேட்பதைப் போல் எந்தக் காலை வீட்டிற்குள் அவர் முதலில் விட்டாரோ அந்தக் காலில் ஒரு போடு போட்டிருக்கிறது நாகம். உள்ளே காலை வைத்தவர் வெளியே அலறிக்கொண்டுவந்து ''முருகா!என்னை மன்னித்து விடு, வந்தது நீதான். என்னைக் காப்பாற்று'' என்று கும்பிட்டு வேண்ட, வல்லக்கோட்டை முருகனும் மருந்தொன்றும் வேண்டாமலே முனுசாமியை குணப்படுத்தி விட்டிருக்கிறார்.

வல்லக்கோட்டை முருகனின் அருள் விளையாடல்களை இவ்வாறு கூறிக் கொண்டே வந்த பெருமாள் எங்களைத் தாம்பரம் செல்லும் பேருந்தில் ஏற்றி'கிருத்திகைதோறும் வாருங்கள். இன்னும் தமிழ்ப்புத்தாண்டு, ஆங்கிலப் புத்தாண்டு, ஆடிக் கிருத்திகை, விநாயகர் சதுர்த்தி, கந்தர்சஷ்டி, நவராத்திரி எல்லாம்கூட இங்கே விசேடமாகக் கொண்டாடப்படும். தவறாமல் வாருங்கள்' என்று கூறி எங்களை வழி அனுப்பி வைத்தார். வல்லக்கோட்டை முருகனை இவ்வாறு வழிபட்டுமகிழ்ச்சியோடு வீடு திரும்பிய நாங்கள் வீடு வந்து சேர்ந்த பிறகும்கூட நாளும் வல்லக்கோட்டை முருகனை நினையாத நேரம் இல்லை என்று கூறும் அளவிற்கு நாங்கள் அவனிடம் இரண்டறக் கலந்து விட்டோம். எங்கள் நெஞ்சங்களில் எல்லாம் நிறைந்து விளங்குகின்றான் வல்லக் கோட்டை வள்ளி மணாளன்.


# திருக்கோயில் பொருந்த ஓர் செங்கல் இடுவார் உலகாள்வார்

கதை: நிறைமதி
படம்: M.N.ராஜா




மன்னார்சாமியின் மெய்யான பக்தியை மெச்சிய நாகம்மாள் நாகமாய் வந்து சீற, மன்னார்சாமி மண்டபத்திலிருந்து வெளியே ஓடிவரவும் மண்டபம் நொறுங்கி விழவும் சரியாக இருந்தது. "அம்மா, நாகம்மா உயிர் கொடுத்தாய் தாயே"!
"அட! நீயா? உனக்கு நேற்றே மரணம் நேர்ந்திருக்க வேண்டுமே! "ஆமாம் சாமி! செத்துந்தான் பிழைச்சேன் நாகம்மா காப்பாத்திட்டாங்க"!" "உனக்கு இனி ஆயுசு கெட்டி, உன் கையாலே அம்மனுக்கு நீ கோயிலும் கட்டுவே"
இவன் என் பக்தன். இவனால் ஆக வேண்டிய காரியம் இன்னும் இருக்கின்றது! இவனுக்கு நாம் வாழ்வு கொடுத்திருப்பதாக எமனிடம் போய் கூறு!
"அப்படியே செய்கிறோம் தாயே"
பரிசுச்சீட்டு ஏஜெண்ட் சிங்காரம் கருங்கல் பாளையம் வந்தார். "மன்னாரு! உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். 15 லட்ச ரூபாய் உனக்கு பரிசு விழுந்திருக்கு"
மன்னார்சாமி தாம் விரும்பியபடியே நாகம்மன் ஆலயத்தைக் கட்டிக் கும்பாபிஷேகமும் செய்து வைத்தார். திருக்கோயில் பொருந்த ஓர் செங்கல் இடுவார் உலகாள்வார்" என்று பெரியோர்கள் தெரியாமலா சொல்லி வைத்தார்கள்"!

# திருவாரூர்த் திருத்தலப் பெருமை



**வித்யா தீர்த்ததாசன்**


தவஞ்செய்த சான்றோர் பொன்னுலகம் புக விரும்புவர், அத்தகைய பொன்னுலகத்தவரும் மனிதராகப் பூவுலகிற்கு இறங்கி வந்து வாழ விரும்பும் பதி அயோத்தி என்பார் கம்பர். இராமன் பிறந்த பதிக்கு அத்தகைய ஏற்றம் அளித்துப்பாடினார்.

ஆனால் தேவதேவனான தியாகராஜ மூர்த்தியே குடிகொண்டு அருள் விரும்பியபதி திருவாரூர். ஒரு சமயம் திருமால் மக்கட்பேற்றை விரும்பிச் சிவபெருமானைப் பூசனை செய்தார். சிவபெருமான் திருமாலுக்கு ஒரு மகன் பிறக்க அருள் செய்தார். தன்னை வணங்காமல், திருமால் அலட்சியம் செய்தது கண்டு சினந்த அம்மை ''உனக்குப் பிறக்கும்மகன் அழியட்டும்'' எனச் சபித்தார். திருமால் திடுக்கிட்டு அம்மையின் அருளை அடைவதற்காக சிவபெருமானையும் அம்மையும் முருகப் பெருமானையும் சேர்த்து சோமாஸ்கந்தர் என்ற உருவில் வழிபட்டார். இறைவன் அம்மையுடன் மீண்டும் தோன்றியபோது, அம்மை ''என் சாபம் வீணாகாது. நின் மகன் நெருப்புக் கண்கொண்ட இறைவனாலேயே அழிக்கப்பட்டு மீண்டும் பிழைப்பான்'' என்று வரங்கொடுத்தாள். திருமால் மகிழ்ந்து தமது நெஞ்சமாகிய கோயிலில் அம்மையப்பரையும் முருகப்பெருமானையும் நிறுவி வழிபட்டார். திருமாலின் நெஞ்சத்து எழுந்தருளி அவர் மூச்சுக் காற்றை உள்ளிழுக்கும் போதும் வெளிவிடும் போதும் இறைவன் அசைந்து ஆடினார். இத்தகைய நடனத்தை அஜபா நடனம் என்பர்.

தேவருலகத்தை அரக்கர்கள் சூழ்ந்து துன்புறுத்தியபோது, தேவராசன் திருமாலை வேண்டினான். ''என் உயிருக்கு உயிரான என் தெய்வத்தை உன்னிடம் தருகிறேன். அவரை ஆராதித்து உன் துன்பத்தை நீக்கிக் கொள்'' என்று கூறித் தன் இதயத்திலிருந்த இறைவனை இந்திரனுக்கு அளித்தார் திருமால். இந்திரன் அம் மூர்த்தியை வழிபாடு செய்து தன் துன்பம் நீங்கப்பெற்றான்.

சிறிது காலத்திற்குப் பின் வலன் என்னும் அசுரன் தேவருலகத்தை முற்றுகையிட்டுத் துன்புறுத்தினான். பூவுலகில் சோழ நாட்டை அரசாண்ட முசுகுந்தன் என்ற அரசனின் துணையை நாடினான் இந்திரன். முற்பிறப்பில் முசுகுந்தன் ஒரு குரங்கு உருவத்துடன் கைலாயத்தில் திரிந்து தற்செயலாக இறைவனும் இறைவியும் அமர்ந்திருந்தபோது அவர்கள்மீது வில்வ இலைகளைத் தூவினான். அந்தப் புண்ணியத்தின் காரணமாக அரச பதவியடைந்து வந்த முசுகுந்தனின் உதவிகொண்டு தேவேந்திரன் வலாசுரனை வென்றான். தனக்கு உதவிய முசுகுந்தனுக்கு ஏதாவது பரிசளிக்க விரும்பிய தேவேந்திரனிடம் ''நீ பூசைசெய்யும் தெய்வத்தையே எனக்கு அளிப்பாயாக'' என முசுகுந்தன் கேட்டுவிட்டான். ''இது திருமால் எனக்கு அளித்தது, அதை உனக்கு எவ்வாறு தருவேன்?'' என இந்திரன் கேட்க ''திருமாலின் உத்திரவு பெற்றே அதை எனக்கு அளிப்பாயாக'' என முசுகுந்தன் வற்புறுத்தினான். தேவேந்திரன் பாற்கடல் சென்று திருமாலிடம் அந்த திருவுருவை முசுகுந்தனுக்கு அளிக்க உத்திரவு கேட்க, அவரும் அனுமதி அளித்தார். எனினும் தனது உபாசனா மூர்த்தியின் திருவுருவைப் பிரிய மனமில்லாத தேவேந்திரன் தன்னிடமுள்ள மூர்த்தியைப் போல் ஆறுமூர்த்திகளைச் செய்துவிட்டு முசுகுந்தனிடம் காட்ட ''இது நீ எனக்கு முன் காட்டிய திருவுருவமில்லை'' என முசுகுந்தன் மறுத்துவிட, இந்திரன் செய்வதறியாது தனது உபாசனா மூர்த்தியின் உருவத்தை முசுகுந்தனுக்கு அளித்தான். அம் மூர்த்தியை முசுகுந்தன் திருவாரூரில் பிரதிட்டை செய்தனன். இவரை ''வீதிவிடங்கர்'' என அழைப்பர். ஏனைய ஆறு மூர்த்திகள் நாகப்பட்டினத்தில் அழகவிடங்கர் என்றும், திருநள்ளாற்றில் நாகவிடங்கர் என்றும், திருக்காறாயிலில் ஆதிவிடங்கர் எனவும், திருக்கோளிலியில் அவனிவிடங்கர் எனவும், திருவாமூரில் நீலவிடங்கர் என்றும், திருமறைக் காட்டில் புவனிவிடங்கர் என்ற பெயருடனும் பிரதிட்டை செய்யப்பட்டு விளங்குகிறார் தியாகராசப் பெருமாள். (டங்கம்-உளி; வி-இல்லாதது. விடங்கர் உளியினால் செதுக்கப்பட்டுச் செய்யப்படாதவர். தானே தோன்றிய சுயம்பு என்பது பொருள்)

சீர்காழிக்குப் பல பெயர்கள் உண்டு என்பது போல் திருவாரூருக்கும் பல பெயர்கள் உண்டு. பிரமன் எல்லாத்தலங்களையும் ஒரு தட்டிலிட்டு திருவாரூரை ஒரு தட்டிலிட்டு, தராசைத்தூக்க, திருவாரூர் மிகக் கனத்ததால் சேத்திரவரதபுரமென்றும், ஆடகேசர் என்ற பெயருடன் இறைவன் வீற்றிருப்பதால் ஆடகேசபுரம் என்றும், பராசக்தி எழுந்தருளியிருப்பதால் சக்திபுரம், ஸ்ரீபுரம் என்றும், தேவர்கள் யாகம் செய்தமையால், தேவயாகபுரம் என்றும், முருகனும் இருந்து அருள் புரிவதால் கந்தபுரம் என்றும், முசுகுந்தன் ஆண்டமையால் முசுகுந்தபுரம் என்றும், கலியின் கொடுமைக் கஞ்சி முனிவர்கள் பூசித்து கலியின் கொடுமை வாராதிருந்ததால் கலிசெலா நகரம் என்றும்



புற்றில் இடங்கொண்டு இறைவன் வசித்து வருவதால் வன்மீகநாதபுரம் எனவும், தேவர்கள் எப்போதும் வந்து வழிபடுவதால் தேவாசிரீயபுரம் என்றும், விராடபுருஷனுக்கு மூலாதாரமாக உள்ளதால் மூலாதாரபுரம் என்றும், திருமகளும் நிலமகளும் வழிபட்டதால் திருவாரூர், கமலாலயபுரம் என்றும் பலபெயர்களும் இப்பதிக்குண்டு.

சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவனே ''நீ எனக்குத் தோழன்'' என்றார். அத்தகைய தம்பிரான் தோழர் வசித்த திருப்பதி இத்திருவாரூர். தன் மகன் தற்செயலாகத் தேரை ஒரு கன்றின் மீது ஏற்றிக் கொன்றுவிட்டான் என்பதை அறிந்ததும், ''அதற்கு வேறுபரிகாரம் கிடையாது. தாய்ப் பசு தன் கன்றை இழந்து கதறுவது மாதிரியான துயரத்தை நானும் அடைய வேண்டும். எனவே என் மகனை நானே தேர்க்காலின் அடியில் வைத்துக் கொல்லுவேன்'' என நீதிதவறாது நடந்த மனுச் சோழன் ஆண்ட திருத்தலம். இத்தலத்தில் பிறப்பதே பெரும்பேறு என்பதை சுந்தரமூர்த்தி நாயனார் ''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' எனக் கூறியதும் சேக்கிழார் ''திருவாரூரில் பிறந்தவர்கள் அனைவரும் சிவ கணங்களேயாவார். அவர்களுடைய திருவடி வணங்கி வாழவேண்டும்'' என்ற கருத்தை

திருக்கயிலை வீற்றிருந்த சிவபெருமான் திருக்
கணத்தார்
பெருக்கிய சீர்திருவாரூர்ப் பிறந்தார்களாத
லினால்
தருக்கிய ஐம்பொறியடக்கி மற்றவர்தம்
தாள்வாங்கி
ஒருக்கிய நெஞ்சுடையவர்க்கே அணித்தாகும்
உயர்நெறியே'

எனத் திருவாரூர்ப் பிறந்தார் புராணம் என்ற தலைப்பில் பாடிப் பரவுகின்றார்.

மகாவித்வான் திரிசிரபுரம். மீனாட்சி சுந்தரனார் இத்தலத்தில் இறைவன் முந்நூற்று அறுபது விளையாடல்கள் புரிந்ததாக அறிந்து, பெரியகாவியமாகப் பாடமுடிவு செய்து

சுமார் 699 பாடல்கள் பாடியதாகவும் ''இந்நூலை முற்றும் பாட எனக்கு இயலவில்லை. தியாகராஜப் பெருமானின் திருவருள் எனக்கு இவ்வளவுதான் போலும்'' என மன வேதனையடைந்து கூறிய தாகவும் வரலாறு.

தருமையாதீனத்தைச் சேர்ந்த சம்பந்த முனிவர் என்ற பெரியவர் ஒருவர் பாடிய புராணம் இவ்வூருக்கு உண்டு என அறிகிறேன். திருமுறை நூல்கள் வெளியிட்டு உலகிற்கு உதவும் இவ்வாதீனத்தின் தற்காலத் தலைவர் தமிழில் மிகமிக ஈடுபாடும்,

**திருவாரூர் அருள்மிகு தியாகேசர் ஆலயத் திருக்குட நன்னீராட்டு விழா 4-4-1988 அன்று காலை 10-15 மணிக்கு நடைபெற உள்ளது. பக்தர்கள் அனைவரும் பங்கு பெற்றுப் பயன் அடைய வேண்டுகிறோம்.**

சிவபக்தியும் உடையவர் என்பதை அடியேன் ஓரளவு அவர்களைத் தரிசித்து பழகும் பேறு பெற்றவன் என்ற முறையில் அறிவேன். அத்தகைய முனிவர் பிரானின் திருவுள்ளம் இவ்வரிய நூலை வெளியிட அங்கயற்கண்ணியும் ஆலவாய்ப் பெருமானும் அருள் செய்ய வேண்டுகிறேன்.

காசிமடம் முதல்வரான குமரகுருபர சுவாமிகள் திருவாரூர் நான்மணிமாலை என்ற ஒரு நூலை அருளிச் செய்துள்ளார்கள். முருகனருள் பெற்று, காசியிலேயே சைவசித்தாந்த மடம் நிறுவிய• இப்பெரியாரும் நம் நாட்டுக்கற்பனைக் களஞ்சியம் போன்றவர். சான்றாக அவர் நூலிலிருந்து சில நயமான பகுதிகளைக் காட்டுதும்.

''திருவாரூரில் இறைவன் புற்றில் அமர்ந்தார். பாம்புகளை அணிந்து கொண்டார். விஷத்தைக் கூட உண்டார். அவர் பக்கத்தில் பாம்புகளுக்கு எதிரியான ஒரு மயில்(அம்மையை இவ்வாறு குறித்த அழகு) இருந்ததால் போலும்''.


''தியாகராஜ மூர்த்திக்கு இருந்தாடழகர் என ஒரு பெயர் உண்டு. திருவடிகள் தெரியும்படி ஆடினால், முன்னர் திருவடியைக் காணாத திருமால் திருவடி கண்டேன் எனக் கூறுவார் என எண்ணியோ, இறைவன் திருவடியால் உதைக்கப்பட்டுத் துன்புற்ற யமன், இப்போது திருவடியைத் தூக்கினால் தன்னை உதைக்கவருகிறான் என்று அஞ்சுவானோ எனக் கருதியோ காலைத்தூக்காமல் இருந்தாடுகின்றார் என்றார்''.

தியாகராசப் பெருமானுக்குப் பெயர்பொருத்தம் உண்டு எனக் கூறுகிறார். இவர் திருமாலுக்கு மண்ணையளித்தார். (பூமி தேவியை மனைவியாக அளித்தார் என்றும், உலகையே உண்ணக்கொடுத்தார் என இருவகைகளிலும் பொருள் கொள்ளலாம்) குபேரனுக்கு நவநிதியளித்தார். எம்போன்றவருக்கு வீடு (மோட்சம்) அளித்தார். தன் மனைவிக்கு உடம்பில் பாதியை அளித்தார். எல்லோருக்கும் எல்லாம் அளிக்கும் இவருக்குத் தியாகராசர் என்ற பெயர் மிகப் பொருந்துமன்றோ!

பெரியபுராணம் பாட ஆதாரமானத் திருத்தொண்டத் தொகைக்கு ''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என அடி எடுத்துக் கொடுத்த தியாகராஜமூர்த்தியின் திருப்பதியான திருவாரூர் மூர்த்தி, தீர்த்தம், தலம் மூன்று சிறப்புகளையும் உடையது. இத்தலத்தின் பூங்கோயிலின் குடமுழுக்கு விழா நடைபெறுவது நாட்டுக்கு நன்மையளிக்கும் ஒரு நிகழ்ச்சியாகும். தியாகராஜ பெருமானின் அருளால் நாம் எல்லோரும் மனுநீதிச் சொழனைப் போல் நீதி நேர்மைதவறாது விளங்கவும், பிற நாடுகளுக்கு தெய்வீகத்தையும் நீதியையும் அறிய நம் நாடு ஒரு வழிகாட்டியாக விளங்கவும் அருளுமாறு திருவாரூர்ப்பெருமானின் திருவடிகளை வணங்கி என் சென்னியில் சூட்டிக் கொள்ளுகிறேன். வாழ்க உலகெலாம்!

வானாடுவெறுத்து நெடு
மண்நாடு குடிபுகுந்த வள்ளால் போற்றி!
தேனாடு செங்கழு நீர்
தேமாலை செறிந்த புயத் தேவா போற்றி!
ஆனாடு கொடி உயர்த்த
அம்மானே! கம்பிக்காதழகா! போற்றி
பானாடு பூங்கோயில் இடம் மேய
கிங்கிணி பொற்பாதா போற்றி!

—தியாகராசலீலை



## கற்பூரம் கண்ணுக்குத் தரும் நன்மை

பழங்காலத்தில் நோய்க் கிருமிகள் தாக்கப்பட்டுக் கண்கள் ஒளியிழந்து குருடானவர் மிகப்பலர். ஆலயம் தொழும் முறையில் கற்பூரப் புகைகளைக் கண்களுக்கு ஒற்றிக் கொண்டால் நோய்க் கிருமிகள் கண்களைத் தாக்குவதில்லை. உடலுக்குச் சுறுசுறுப்பு ஏற்படுத்துகிறது.

—பேராசிரியர் டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்

# பக்த குசேலர்

**கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்**

## 3. ஏழைக்கருளிய எம்பெருமான்

குசேலர் கண்ணனுடைய துவாரகையினுள் நுழைந்தார். மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் நிறைந்த அந்த அழகிய நகரத்தைக் கண்டு பிரமித்தார். கண்ணனைக் கண்டு களித்து அப்பெருமான் அளித்த சந்தனமணிந்து, அவன் அளித்த மாலைகளை ஏற்றுக் கண்ணில் ஒற்றிக்கொண்டு சிலர் அரண்மனையிலிருந்து வெளிவந்தனர். கண்ணனைக் காணும் ஆவலில் அப்பெருமானுக்கு அளிக்க வேண்டிய சந்தனம் மலர் மாலைகளை எடுத்துக்கொண்டு அரண்மனையை நோக்கிச் சென்றனர் பலர். வந்தவர்களும் போனவர்களும் நெருங்கிச் சந்தனம் பன்னீர் முதலானவை சிந்த, மாலைகள் ஒன்றுக்கொன்று உராய ஒரே நறுமணம் ஊரெங்கும் வீசியது. இக்கூட்டத்தின் நடுவில் அகப்பட்ட குசேலருடைய வியர்வை வேகம் பொருந்திய கந்தைத்துணி கூட நறுமணம் வீசியது. இறைவனது திரு முன்னர் அடைந்தவர்க்குப் பழைய வாசனை மாறி புது நறுமணம் ஏற்படும் என்பது குறிப்பு. துவாரகையை அடைந்த அவருக்குப்பசி, தாகம், களைப்பு எல்லாம் அடங்கி அவரை அறியாமல் உடல் கூடச் சிறிது பருமனடைந்தது போல் தோன்றியது.

சிறந்த அந்நகரின் வளத்தில் இவ்வாறு
சிறிதறிந்து அற்புதம் உறலால்
இறந்த பல்காத வழி நடந்ததனால்
மேவிய வருத்தமும் இளைப்பும்

பறந்தன பசியும் ஒழிந்தது நாவில்
பைம்புனல் ஊறியது உறவும்
அறந்தழை மனத்தான் உடலமும் சிறிது
தளிர்ந்ததால் அதிசயம் பயப்ப.

அரண்மனையின் முன் வாசலை அடைந்த குசேலர் அங்குள்ள பெரும் கூட்டத்தைக் கண்டு கற்ப கோடி காலம் காத்திருந்தாலும் நெருக்கம் தீராது போலும்! எனினும் எப்படியாவது உள்ளே நுழைய வேண்டுமெனக் கூட்டத்தில் நுழைந்து அரண்மனை வாயிற்காப்பாரைக் கண்டு ''வைகுந்தத்தின் வாயிலில் காவல் காக்கும் ஜய விஜயர்களே இங்கும் காவலராக வந்துள்ளனர் போலும்! வேறு எவருக்கு இந்தப் பேறு கிட்டும்' என எண்ணினார். அவர்களது அருகில் சென்று ''மக்களில் மேன்மையானவர்களே! கண்ணனின் அடியவர்களே! புண்ணியம் புரிந்தவர்களே! தவத்தோரும் பிரமனும் அடைய முடியாத புகழுடையவர்களே! எல்லாம் அறிந்தவர்களே! என் ஆசியை ஏற்பவர்களே! எளியவனான இந்த அந்தணன் பெயர் குசேலன். நல்லோரைக் காக்க, அல்லாதவரை அழித்து தருமத்தை நிலை நிறுத்த, தமது பாற்கடலை விட்டு எழுந்து கண்ணனாக அவதரித்துள்ள பெருமானுடன் சிறுவயதில் கல்வி கற்கும் பேறு பெற்றேன். என் வறுமையை அப்பெருமானுக்குத் தெரிவித்து எனக்கு அவரைக்காண உதவி செய்ய வேணும்'' என வேண்டினார்.

அந்த வாயிற் காவலரின் அறியாமை அவரது கண்களை மறைக்க, குசேலரின் பெருமையை அவர்கள் அறியவில்லை. ''உலகமெலாம் வணங்க, எதிரிகள் ஓட வெற்றியுடன் அரசு செய்யும் எங்கள் கண்ணன் எங்கே! நீர் எங்கே! கந்தையணிந்த ஏழையான பார்ப்பனரே! அறிவை இழந்தீரா? வயதான குற்றமா? உம்மைப்போல் ஏழைகள் இங்கு வரலாமா? உயர்ந்த ஆடை அணிகள் இல்லாமல் அரசர் முன் வரலாமா! இங்கு வரக்கூடியவர் பல்லக்கில் வரவேண்டும். நிறைய பணம் கொண்டு வரவேண்டும். தெரியுமா?'' என்றனர்.

உலகில் வெளிமயக்கான தோற்றமே விரும்பப் படுகிறது. கலியுகத்திற்கு முந்திய யுகமான துவாபரயுகத்திலேயே இந்த நிலை போலும்! ஔவை இதே மாதிரி ஒரு அனுபவத்தை அடைந்தாள். தன்னை ஒரு அரசன் வரவேற்காதது கண்டு ''பக்கத்திலேயே இரண்டுபேர் புகழ்ச்சியான வார்த்தைகளைக் கூறிக் கொண்டே வரவேண்டும். கை நிறைய மோதிரங்கள் அணிந்திருக்க வேண்டும். உடம்பில் பட்டோ பஞ்சோ உயர்ந்த ஆடைகள் வேண்டும்? இது போதும்! புலவன் வாயிலிருந்து வரும் பாடல் வேம்பாகக் கசந்தாலும் நஞ்சாகயிருந்தாலும் குற்றமில்லை போலும்! எளிமையை உயர்வாக எவரும் மதிக்கவில்லையே! என வருந்தி, தன் உணர்ச்சியை

'விரகர் இருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும்-
அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்' அவர்
கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று'' என்று பாடி

வெளியிட்டாள். அந்த முறையில் வெளிவேடம்



இல்லாது எளிய தோற்றமுள்ள குசேலரை இகழ்ந்து பேசிய காவலர்கள் ''மழைக்குக்கூட பள்ளிக் கூடத்தில் ஒதுங்காதவனாக இருந்தாலும் குற்றமில்லை. பணக்காரனாக தடபுடலுடன் வந்தால் எங்கேயும் இடம்கிடைக்கும். எத்துணை கல்வியறிவுள்ளவராயிருந்தாலும் பணமின்றேல் எவரும் மரியாதை காட்டமாட்டார்கள். ஐயா கண்ணனுடன் படித்தவர் என்றீர்களே !அப்படி அவருக்கு நட்பிருந்தால் இதுவரை உம்மை எண்ணி ஓரிரண்டு கடிதங்களாவது எழுதியுள்ளாரா? அவ்வளவு அன்பு நிறைந்த நட்பிருந்தால் உமக்குத் தூதனுப்பி வரவழைத்திருக்கலாமே! ஒருவேளை ஒன்றாகப் படித்திருந்தாலும் கூட, அன்று எங்கள் அரசரும் சிறுகுழந்தை; நீரும் குழந்தையாய் இருந்திருப்பீர்! நட்பிருந்திருக்கலாம்! தற்காலம் அவரது பதவி, தேவர்கள்கூட நெருங்க முடியாத நிலை. பழைய நட்பை எண்ணி நீர் உள்ளே புகக்கூடாது. அரசர்கள் என்றைக்கும் யாவருக்கும் நண்பர்களாயிருக்க முடியாது. இதோ பாருங்கள்! பற்பல நாட்டு மன்னர்கள் எங்கள் கண்ணனைக்காணச் சேனை பரிவாரங்களுடன் வந்து வெகுநாட்களாகக் காத்திருக்கிறார்கள். இன்னும் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் இவர்களால் காத்திருக்க முடியும். உம்மால் அது முடியாது. எனவே வந்த வழியே ஊருக்குத் திரும்பிச் செல்லும்'' எனக்கூறக் குசேலரும் ''கண்ணனுடன் கல்வி கற்றதே பொய் என்ற மாதிரி பேசுகின்றார்களே! என்னவோ முத்தாரம், மணியணிகள் பட்டாம்! இதெல்லாம் என் பாட்டன் காலத்திலிருந்தே நான் காதால் கூடக் கேட்டதில்லையே? யோசிக்காமல் இங்கு வந்தது குற்றம் போலும்! இதன் நடுவில் என் கையில் கந்தைத் துணியில் முடிந்து வைத்துக் கண்ணனுக்காக நான்கொண்டுவந்துள்ள அவலைக் கண்டால் இன்னும் எப்படி எல்லாம் பரிகாசித்துப் பேசுவாரோ'' என எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி வாடிய குசேலரை நோக்கி, நல்ல குணமுள்ள இரு காவலர் அடி வணங்கினர். பரிகாசமாகப் பேசியவர்களை 'இவரை யார் என எண்ணினீர்கள்! பெருந்தவச் செல்வர், வாய்மையுள்ளவர், வேதமூர்த்தி, நல்லவரான கண்ணன் போன்றவர்கள் உள்ள இடத்திற்கு வருவார்களே தவிர மற்ற இடங்களுக்குச் செல்ல மாட்டார். ''எனக்குத் தெய்வம் நல்லவரே'' எனக் கண்ணன் கூறிய பெருமையுள்ள குணத்தினர். இவரைச் சாதாரணமானவர் என எண்ண வேண்டாம். உத்தமஞானி. ஞானியாயினும் கருமமார்க்கமான தவத்தை இவர் விடாதவர் என்பதை இவரது நலிந்த உடல் காட்டுகிறது. இவர்போன்ற ஞானிகளைப் புகழ்ந்தால் மகிழ்ச்சியும், இகழ்ந்தால் கவலையும் கொள்ளமாட்டார். கிடைத்தவற்றை உண்பர். ஓரிடத்திலும் தங்கவே மாட்டார். இவரைக் கண்டவுடனேயே உள்ளம் உருகுகிறது. இவரது

வரவை உடனே கண்ணனிடம் கூறவேண்டும். இவரை நீங்கள் இகழ்ந்தது குற்றம்''என அந்தக் காவலர்களைக் கடிந்து, குசேலர் திருவடிகளில் விழுந்து வணங்கி ''ஐய! தங்கள் வரவு நல்வரவா கட்டும். தங்களைக் கண்டு மகிழ்கிறோம்! தங்களைக் கேவலமாகப் பேசிய காவலரை மன்னித்தருள்க. அவர்களைத் தாங்கள் மன்னிக்காவிட்டால் நரகத் தையடைந்து வருந்துவர். அடியாருக்குக் குற்ற மிழைத்துவிட்டனர். பொறுத்தருள வேண்டும். தங்களைக் கண்ட எங்களுக்கு எல்லாவிதமான புனித நதிகளிலும் நீராடிய புண்ணியங்களும் எல்லா விதமான நோன்புகளும் நோற்ற புண்ணி யங்களும் கிடைத்துவிட்டன. தாங்கள் சற்றுத் தாமதிக்க வேணும். கண்ணனிடம் தங்கள் வரை வைக் கூறி, தங்களை உள்ளே அழைத்துச் செல்லு கிறோம்'' எனக் கூறி விடைபெற்றுக் கண்ணபிரா னின்அரண்மனைக்குள் சென்றனர்.

அரண்மனைக்குள் கண்ணன் இருப்பிடம் சென்ற காவற்காரர்கள் அப்பெருமானின் இணை யடிகளை வணங்கி ''வேதநாயக! சந்திர குலத் தோன்றலே! தேவர்க்கும் காண இயலாத பெரு மானே! தாமரைக் கண்ணா! வெற்றியின் இருப் பிடமே! துவாரகாபதியே வணக்கம். தங்களோடு குழந்தைப்பருவத்தில் படித்தவராம், மிகுந்த நட் புடையவராம்! கந்தைத்துணியுடன் ஒரு அந்தணர் வந்துள்ளார். பெயர் குசேலன் எனக்கூறினார்''.

''ஆதிநாள் ஐய! நின்னோடு அருங்கலை
கற்றுள்ளானாம்

போதவும் சிறந்த நட்பு பூண்டு கொண்டவ
னாம்! கந்தை

மேதகக் கொண்ட நீரான்: மெய்ம்மறையவர்
குலத்தான்

கோதறு குணத்தின் மிக்கான்: குசேலன்என்று
இயம்பினான் பேர்''

''படித்தவராம்-பக்தராம்'' என்று கூறிய காவலன் ''கந்தையணிந்துள்ளார், அந்தணகுலத்தவர், நல்ல குணமுடையவர்''எனத் தன் கருத்தை உறுதியாகக் கூறும் நயம் வியக்கற்பாலது. இது கேட்ட கண் ணன் மகிழ்ச்சியடைந்து முகமலர்ந்து கருணை கொண்டு ''இன்று நாம் வாயிலில் வந்து நிற்கும் அந்தப் பெருந்தவப் பெரியோனை இங்கு அழைத்து வாருங்கள்'' எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

திரும்ப ஓடிவந்த காவலர் வாயிலில் நின்ற குசேலரின் திருவடிகளில் விழுந்து ''மாதவஞ்செய்த வேத உருவினரே! பிறவிக்கடல் கடக்கப் பெருந் தவம் புரிந்தவரே! எம் கண்ணனின் அருமை நண் பரே! வணக்கம். வணக்கம். தங்கள் வரவைக் கண்ணனுக்கு உரைத்தோம். கண்ணனுக்கு ஏற் பட்ட மகிழ்ச்சியை எவ்வாறு கூறுவது? முன்னம் அங்கிருந்த மகிழ்ச்சிக்குரிய செய்திகளைப் பூராவும் மறந்து விட்டார். தங்கள் நினைவாகவே ஆகிவிட் டார். தாயின் வருகையைக் கேட்ட குழந்தையைப் போல் அழைத்துவா அழைத்துவா அழைத்துவா என மும்முறைகூறினார். மூன்று முறைகள் ஒன் றைக் கூறினால் கட்டாயம் வேண்டுமென்று பொருள். இரு முறைகள் சொன்னால் போதாது. மூன்றுக்கு மேல் சொன்னாலும் அவ்வளவு சக்தி கிடையாது. விரை சொல் அடுக்கே மூன்று வரம் பாகும் என்பது இலக்கண சூத்திரம். இலக்கணம் இடமளிக்கவில்லை என்பதால் மூன்று முறையோடு நிறுத்திவிட்டார். இல்லாவிட்டால் ''அழைத்துவா' என்பதை நீர் வந்து சேரும் வரை ஜபம் செய்வது மாதிரி சொல்லிக் கொண்டேயிருப்பார். மேலும் மேலும் கூறவேண்டுவதில்லை. தாமதம் கூடாது. தாங்கள் உள்ளே வரத் தாமதமானால் அவர் இங்கு வந்து விடுவார். உள்ளே வரவேண்டும்'' என அழைத்தான் அக்காவலன்.

''இலக்கணம் இன்மை நோக்கி இதற்கு மேல்
சொற்றானல்லன்:

மலக்குறும்பு அறுத்து உயர்ந்த மாதவத்
தலைவர் ஏறே!

பலப்பல சொல்லி என்னை பாணித்தல் கருமம்
அன்று:

நலமுற நீ விரைவின் எய்தாவிடின் அவன்
நண்ணுமிங்ஙன்''

இலக்கண இலக்கிய வித்வானான இக்கவிஞர் ''கண் ணனும் இலக்கணத்திற்குக் கட்டுப்பட்டான்''

என்று இலக்கணத்தின் பெருமையைக் குறித்தார். இலக்கணம் என்பது மிகவும் கடினம். அது இல்லாமலே கவிபாடலாம் எனச் சிலர் தற்காலம் கூறுவர். நெற்றியில் இரு புருவங்களுக்கு மத்தி யில் குங்குமப் பொட்டு அணிவது அழகாக இருக் கும். ஒரு பக்கம் தள்ளி அணிந்து கொள்வது காண் பதற்கே கோரமாக இருக்கும். இது போல் இந்த வார்த்தைக்குப்பின் இந்த வார்த்தையை வைத்துப் பாடுவது அழகு. இலக்கியத்திற்கு இலக் கணம் மிக அவசியம் என்பதை நாம் அறியவேண் டும் என்பதை நம் மனத்தில் நன்கு புரிந்து கொள் வதற்காகவே கண்ணன் இலக்கணத்திற்குக் கட்டுப் பட்டான் என அழகாகச் சுட்டிக் காட்டினார்.

குசேலர் காவலன் பின்னேயே கண்ணன் இருப்பிடம் நோக்கி நடக்கலானார். முன்னம் அவரைக் கடிந்து பேசின காவலர்கள் ''இப்பெரிய வரை என்னவெல்லாம் பேசினோம். கண்ணன் அறிந்தால் நமக்கு என்ன தண்டனை கிடைக்குமோ! இந்த அந்தணர் கருணையுள்ளம் படைத்தவராகக் காணப்படுகிறார். ஆதலால் கண்ணனிடம் நம்மைப் பற்றிக் கூறமாட்டார்'' எனத் தாமாகவே ஐயத் தையும் உண்டாக்கிக் கொண்டு தெளிவையும் அடைந்தனர்.

இவர் வருகையை எதிர்பார்க்கும் கண்ணனை 'சூரியனை எதிர்பார்க்கும் தாமரை போலும், சந்திரனை எதிர்நோக்கும் ஆம்பல் மலர் போலும், மேகத்தின் வரவு நோக்கும் மயில் போலும், தாயின் வரவை ஆவலுடன் எதிர்நோக்கும் கன்று போலும் என்றெல்லாம் வர்ணனை செய்த கவிஞர் கடவுளான கண்ணன் தன்னைக் காணவேண்டு மென அடியவர் எவ்வாறு ஆவலுடன் இருப்பாரோ அதுபோல அடியவரான குசேலரைக் காணக் கண் ணன் ஆவலாக இருந்தார் என்று கூறி, தாகத்தால் தவிக்கும் ஒருவன் தண்ணீரை எதிர்பார்ப்பது போலக் கண்ணன் காத்திருந்தார் என்றார்.

இவ்வாறு தன் வரவை எதிர்நோக்கும் கண் ணன் எதிரிலே தோன்றினார் குசேலர். கண்ணன் குசேலருக்குக் காட்சி கொடுத்த அக்காட்சி கவிஞ ரின் கவிதைகளில் மிகமிகச் சிறந்த தொன்று. அதை வரும் இதழில் காண்போம்!

—(தொடரும்)

# அறம் தழைக்கும் ஆமாத்தூர்

புலவர் தி. மு. சங்கரலிங்கம்

திருவாமாத்தூர்.

**முன்னுரை :**

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்துள்ள பரம்பொருள், தன்னை வழிபடும் அன்பர்கள் மனக்கருத்தறிந்து வேண்டியவர் வேண்டியாங்கு எய்திட அருள்பாலிக்கச் சிவலிங்கத் திருமேனிதாங்கி எழுந்தருளியுள்ள தலங்கள் மிகப் பல. இவ்வாறுள்ள தலங்கள் தமிழகத்தில் பலவுள வென்றாலும் அதன் பிரிவாகிய நடுநாட்டில் உள்ள இருபத்திரண்டு தலங்களுள் பல்லாற்றானும் மேம் பட்டுத் திகழ்வது திருவாமாத்தூர் என்ற சிவத்தல மாகும்.

**பெயர்க் காரணம்**

தென்னார்க்காடு மாவட்டத்தில் விழுப்புரத் தையடுத்து வடமேற்குத் திசையில் ஆறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது இவ்வூர். ஆதியில் பசுக்கள் கொம்பில்லாமல் இருந்தன. நந்தி தேவர், காமதேனு உள்ளிட்ட பசுக்குலங்கள் ஒருங்கு சேர்ந்து இவ்வூர்ப் பெருமானை நோக்கித் தவமிருந்தன. இறுதியில் காட்சி தந்த இறைவன், இவைகளின் குறைகளைக் களையக்கருதிக்கொம்பு களைத் தந்தருளினான். அதுமுதல் பசுவினம் தம்மை எதிரிகளிடமிருந்து காத்துக் கொள்ள லாயின. இவ்வாறு பசுக்குலம் வாழக் கொம்பு கொடுத்தமையால் பசுக்கட்குத் தாயூர்என்ற பொரு ளில் வடமொழியில் 'கோமாதுருபுரம்' என்றும் தமிழில் 'ஆமாத்தூர்' எனவும் வழங்கலாயின. 'திரு' என்பன அடைமொழி. இவ்வூர்ப் பெருமான்சுயம்பு வடிவினர், 'எத்தனையோ சதுர்யுகம் கண்ட திருவாமாத்தூர்'' என்று இவ்வூர்த்தல புராணம் பேசுகிறது.

**தலச் சிறப்புகள்**

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகையிலும் ஈடிணையில்லாதது திருவாமாத்தூர். இறக்கும் போதொருவன் 'ஆமாத்தூரானே' என்று கூற முயன்றவன் கூறி முடிப்பதற்குள் இறந்தான் ஆனால் இவர், தேவலோகம் சென்று சிறப்பெய் தும் பாங்குடையீரே அன்றி 'யாம் நெருங்கமாட் டோம்' என்று இயமதூதர் சொல்வாராம்' இது பற்றி

''சாம்பொழு (து) ஒருவன் 'ஆ' என்று சாற்றிடில்
பாம்பொருங் கணிஅபி ராமப் பண்ணவன்
தேம்பொரு பெயர்சொலச் சிந்தித்தான் அதால்
யாம்பொரேம் எனச் சொல்வார் இயமன் தூதரே''

என்று இவ்வூர்த்தலபுராணம் கூறுகிறது.


திருவாரூரில் பிறந்தால் முத்தி, சிதம்பர நாதனைக் கண்டு தொழுதால் முத்தி, திருவண்ணா மலையானை நினைத்தால் முத்தி, காசியில் இறந் தால் முத்தி என்பர். ஆனால் இந்நான்கையும் அறந்தழைக்கும் திருவாமாத்தூர் செயும் என்பதை

'' பிறந்தவர்க்கே வீடுதவும் திருவாரூர்,
கண்டு தொழப் பெற்றார் கட்கே
சிறந்தமுத்தி தரும்தில்லை, அருணைநினை
வார்களையே சேர்க்கும் வானில்,
இறந்தவர்க்கே இனிப்பிறவா நிலையளிக்கும்
வடகாசி இந்த நான்கும்
அறந்தழைக்கும் திருவாமாத் தூர்செயுமால்
இதன் பெருமை அறிவார் யாரே!''

என்ற பாடலின் மூலம் தலபுராண ஆசிரியர் கோடிட்டுக் காட்டுகிறார். இத்தலத்தில் ஆறு, குளம், கிணறு என்ற மூன்று தீர்த்தங்கள் உள்ளன. பெண்ணையாற்றின் பிரிவினதாகிய ஆறு பம்பை என்ற ஆறு, ''ஆம்பலம்பூம் பொய்கை'' என்ற சம்பந்தப்பெருமான் பாராட்டும் குளம். இதற்குக் 'குமுதவதி' என்ற வேறுபெயரும் உண்டு. ஏழு முனிவரின் சீடர்கள் வழிபாடு நிமித்தம் நீர்கொணர தண்டதையூன்றிய இடம் தண்ட தீர்த்தம். தற் போது இது கிணறு வடிவிலுள்ளது. சுவாமி கோயில் கிழக்கு நோக்கியும் அம்மன் கோவில் மேற்கு நோக்கியும் சற்று தள்ளி எதிர் எதிராக இருப்பது வியத்தகு அமைப்பாகும்.

**வண்ணச்சரபரின் மாண்பு**

திருவாமாத்தூர்த் தலபுராணச் செய்திகள் வடமொழி ஸ்காந்தத்தில் நாகர காண்டத்தில் ஏழுசருக்கங்களில் கூறப்பட்டுள்ளன. அதை விரித்துத் தமிழாக்கம் செய்து பூர்வகாண்டம் எனவும், தம் காலத்தில் கண்டுணர்ந்து கேட்டு ணர்ந்தவற்றை உத்திரகாண்டம் எனவும்அமைத்து ஆயிரம் பாடங்களில் தலபுராணமாக உருவாக்கித் தந்தவர் வண்ணச் சரபம் தண்டபாணிசுவாமி களாவர். 1839-ல் திருநெல்வேலியில், தோன்றிய இவர், இளமையிலேயே வேல்வழிபாடு செய்து புதிய தமிழ்க்கவிகள் இயற்றும் தெய்வீக நலம் கைவரப்பெற்றார். சமய பேதமின்றி, பொது



**திருவாமாத்தூர் கோயில் முன் தோற்றம்**

நெறிக்கொள்கையுடன் பல சமயக் கடவுளர்கட்குப் பல்லாயிரம் பாடல்கள் அருளியதோடு பனை ஓலைச் சுவடியில் தாமே எழுதியும் வைத்துள்ளார். புலவர்புராணம், அறுவகை இலக்கணம் போன்ற நூல்கள் மூலமாக ஒரு லட்சம் கவிகள் அருளிப் பலதல சேவை செய்த பின் இறுதியில் இத்தல்த்தில் தங்கலானார்.

'' செம்பு மாநதி காவிரி ஒழுகுதீம் பாலி
கம்பை பெண்ணை தண்கெடில மாகிய
நதிகளின் நீர்
நம்பங் கிந்த நாளிலை பசும்குலம் உயும் நகர்ப்பால்
பம்பை மாநதி வேட்கை நீடியது நம்பாலே.''

என்ற உறுதிப் பாட்டுடன் எல்லைதாண்டா விரதம் கொண்டு பத்தாண்டுகள் தங்கித் தவமாற்றி 1898-ல் ஞானசமாதி கொண்டுள்ளார். தல புராணமேயன்றிப் பலநூல்கள் இவ்வூர்ப்பெருமான் மீது அருளினார்.

**திருமுறைகளின் கருத்துகள்**

சைவ சமயாச்சாரியர்களுள் ஞானசம்பந்தப் பெருமான் இரண்டு பதிகங்களும், திருநாவுக்கரசு சுவாமிகள் இரண்டு பதிகங்களும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு பதிகமும் அருளியுள்ளனர். ஞான சம்பந்தப்பெருமான் அருளிய ஒருபதிகத்தில் இங்குள்ள பெருமான் புகழைப் பாடாத நாவும், பார்த்து மகிழாத கண்களும், அருளார்புகழைக் கேட்காத செவிகளும், தொழுது வாழ்த்தாத வாழ்வும் பயனற்றவை என்று குறிப்பிடுகிறார். அடியவர்கள் புடைசூழ சம்பந்தப்பெருமான் இங்கு எழுந்தருளி வழிபாடு செய்தார். அப்பொழுது அவர்தம் அடியவர்கள் பசியால் வாடலாயினர். உணவுக்கு ஏது செய்வதெனத் தயங்கினார். பிறர் துணை நாடாத அப்பெருந்தகை ஆண்டவனிடமே குறையைக் கூறி

''தொண்டர் வந்து வணங்கி மாமலர் தூவி
நின்கழல் ஏத்துவார், அவர்
உண்டியால் வருந்தல் ஏன்? இரங்காதது என்னே
கொலாம்?''


என்று குறிப்பிட்டார். உடன் காமதேனுவின் மூலம் அறுசுவை உணவு வழங்கலானார் பெருமான். இப்பாடலைப் போலவே அனைத்துப் பாடலிலும் ஒவ்வொர் வினாவை தொடுத்துப் பெருமானைப் பாடிப் பரவியுள்ளது புதுமையாகவுள்ளது.


அப்பரடிகள், தலைவன் தலைவி அமைப்பில் அகப்பொருள் துறையில் அமைத்துள்ள தாண்டகப் பாடல்கள் சுவைத்து மகிழத்தக்கவையாகும். ஆமாத்தூர் அண்ணலை வழிபடும்போது தம்மைத் தடுத்தாட்கொண்ட அதிகை அம்மானோடு ஒப்பிட்டு

''குண்டர் பீலிகைக் கொள்ளும், குணமிலா
மிண்ட ரோ(டு) எனை வேறுப டுத்தியுய்யக்
கொண்ட நாதன் குளிர்புனல் வீரட்டத்(து)
அண்ட னாரிடம் ஆமாத்தூர் காண்மினே''

'' தென் அதிகை விரட்டம் சேர்ந்தார்போலும் ''

என்று குறிப்பிட்டருளுகின்றார்.





தன்னைத் தோழனாகக் கொண்ட சுந்தர மூர்த்தி சுவாமிகள் இவ்வூர்ப்பெருமானைக் காண வந்தார். வாயிலில் காவல் செய்த பூதம் பெருமான் இப்பொழுதுதான் வெளியிற் சென்றார் என்று வழிகாட்ட அவ்வழியே சென்று இறைவரைக் கண்டு சுந்தரர் உள்ளம் களித்தார்.

''காண்டனன் காண்டனன் காரிகையாள்
தன்கருத்தனா
ஆண்டனன் ஆண்டனன் ஆமாத்தூர்எம் அடிகட்கு
ஆள்
பூண்டனன் பூண்டனன் பொய்யன்று சொல்லுவன்
கேண்மின்கள்
மீண்டனன் மீண்டனன் வேதவித் தில்லா
தவர்கட்கே''

என்று பாடி மகிழ்ந்தபின், இவரது குறிப்பறிந்த இவ்வூர்ப்பெருமான் வன்னிக் காய்களைத் தமது நான்கு கரங்களாலும் அள்ளியெடுத்துப் 'பிடி' என்றார். 'வன்னிக்காய்களா தேவை எனக்கு'' என்று மனவருத்தமுடன் தம் துணியிற் பிடித்த போது அவை முற்றும் பொன்னாகக் காட்சி தந்தனவாம். சுந்தரர்க்கோ எல்லையில்லா களிப்பு.

''பொன்னவன் பொன்னவன் பொன்னைத் தந்
தென்னையும் போகவிடா
மின்னவன் மின்னவன் வேதத்தின் உட்
பொருளாகிய
அன்னவன் அன்னவன் ஆமாத்தூர் ஐயனை
ஆர்வத்தால்
என்னவன் என்னவன் எனஇன்புற் றிருப்பனே.''

என்று பாடி மகிழ்கிறார். இவ்வாறு ஒருவரியில் இரு தடவை ஒரு சொற்றொடர் வருமாறு பாடியுள்ள வேறு பதிகங்களைக் காண முடியவில்லை. இவைபோல வெளிப்படையான கருத்துகளும் தத்துவங்களும் பல அரிய கருத்துகளும் மூவர்பாடிய இவ்வூர்த் தேவாரப் பதிகங்களிற் கண்டுணரலாம்.

இங்கு கோயில் கொண்டுள்ள பெருமானை இராமபிரான் வழிபட்டுஅருள் பெற்ற சிறப்பை அப்பரடிகள்

''குராம னும் குழ லாள் ஒரு கூறனார்
அராம னும்சடை யான்திரு ஆமாத்தூர்
இராம னும்வழி பாடுசெய் ஈசனை
நிராம யன்றனை நாளும் நினைமினே''

என்று தமது பாடலிற் விளக்கியருள்கிறார்.

### தலவிருட்சம்

இவ்வூரிலுள்ள கடவுளரை அபிராமேசுவரர், அழகியநாதர், ஆண்டநாயகர் என்றும் அம்பிகையை முத்தாம்பிகை, அழகியநாயகி, ஆண்டநாயகி, அழகுடையாள் என்றும் வழங்குகின்றனர். தலவிநாயகர் மால்துயரம் தீர்த்த விநாயகர் என்று போற்றப் பெறுகிறார். தலவிருட்சம் வன்னிமரம்; பார்ப்பவர் வியக்குமளவுக்கு உள்ளீடற்று, மூன்றுபிரிவுடன் அடிமரம் காட்சியளிப்பது உண்மையிலேயே வியத்தகு செய்திதான். அம்மையை விடுத்து ஐயனைமட்டும் வண்டுருவில் துளைத்து வழிபட்ட பிருங்கி முனிவர் கொண்ட சாபம் தீர இவ்வாறு முக்காலுருவத்தில் வன்னிமர வடிவில் அம்மன் கோவிலருகிலேயே தவம் செய்கிறார் எனத் தலபுராணம் பேசுகிறது.

### ஆறு திரும்பிய அதிசயம்

ஒரு சமயம் காஞ்சியிலிருந்த இரட்டைப் புலவர்களைத் தம்பால் வருமாறு அழைத்தார் ஆண்டநாயகர். வரும் வழியில் 'திருவாமாத்தூர் கலம்பகம்' என்ற நூலைப்பாடிக் கொண்டு வந்து முடித்தார்கள். அப்போது இங்கு அரசு புரிந்த அச்சுததேவப்பல்லவன் முன்னிலையில் அரங்கேற்றம் செய்தார்கள். அதில் ஒரு பாடல் படித்துப் பொருள் கூறும்போது சபையில் சலசலப்பு தென்பட்டது. அதனை அறியமுற்பட்ட புலவர்கட்குக் கிடைத்த தகவல் வியப்பை ஊட்டின. ''பார்வையற்ற புலவரால் உண்மை நிலைமை அறிய முடியாதது தான்; நடக்க முடியாத புலவர் உண்மையறிவார் அல்லவா. ஆற்றின் கீழ்க்கரையில் கோயிலிருக்க, மேற்கரையில் கோயிலிருப்பதாகப் பாடியுள்ளார்களே இஃது இயற்கைக்கு மாறுபட்டது தானே'' என்றனர் மக்கள்.



''ஆற்குழையோ அரவோ ஆயர்பாடி
அருமனையோ
பாற்கடலோ திங்களோ தங்கும் ஆவம்
பலபலவாம்
மார்க்கமும் ஆகிநின்றார் மாதைநாதர் வலங்
கொள்பம்பை
மேற்கரைக் கோயில் கொண்டார் புரம் சீரிய
வெங்கணைக்கே''

என்பது அப்பாடல். உண்மைநிலை உணர்ந்த புலவர்கள் ''நாமும் அறியோம்; எம்நாவில் உள்ளாளும் பொய் கூறாள்; இதன் உண்மைநிலை தெரியும் வரை அரங்கேற்றம் செய்வதில்லை'' என்று கூறி ஏட்டைக் கட்டிவைத்து விட்டு இறையருளை எண்ணித் தவம் கிடந்தனர். அன்றிரவே பெருமழை பெய்து அவர்கள் கூறியுள்ளது போலவும் இன்றுள்ளது போலவும் திசைமாறி மேற்குக் கரையில் கோயில் அமைய ஆறு ஓடியது. காலையில் இம்மாற்றம் கண்டு அனைவரும் இறையருள்பெற்ற இவ்விரட்டைப் புலவர்களைப் போற்றிப் பாராட்டினர்.

சத்திய நெறியின் வடிவாகத் திருவாமாத்தூரில் திருவட்டப்பாறை சந்நிதியொன்றுள்ளது. பக்கத்தூரில் முன்னாளில் தம்பியை வஞ்சித்த தமையன் ஒருவன். மூதாதையர் பொருளையெல்லாம் விற்றுத் துளையுள்ள கைத்தடியில் பொன்னாக மாற்றிச் சேமித்துக் காத்து வந்தான். இதனை மற்றவர் யாவரும் அறியார். வயது நிரம்பியதம்பி தமையனிடம், முன்னோர் பொருளிற் பங்கு கேட்டான். என்னிடம் ஏது பொருள் என்றான். தமையனின் வஞ்சனையறிந்த தம்பி. அப்படியாயின் திருவாமாத்தூர் திருவட்டப்பாறைக்கு வந்து சத்தியம் செய்துகொடு என்றான். அதற்கிசைந்த தமயனும் இங்கு வந்தான். இவ்வியத்தகு நிகழ்ச்சியின் உண்மையைக் காண மக்கட் கூட்டம் திரண்டிருந்தது. தமையன் தன்பாலிருந்த கைத்தடியைத் தம்பியிடம் கொடுத்து 'என்னிடம் ஏது பொருள்? எல்லாம் தம்பியிடமேயுள்ளது இது சத்தியம்'' என்று வலம் வந்து கூறிக் தம்பியிடமுள்ள கைத்தடியைப் பெற்றுக் கொண்டான். மக்களும், தம்பியும் உள்ளம் கொதித்தனர். தம்பியை அண்ணன் ஏமாற்றியது போலவே, தங்களையும் திருவருள் ஏமாற்றிவிட்டதே என மனம் நொந்தனர். விபரீதம் நிகழாதது கண்டு திகைத்தனர்.

திரும்பி ஊர் செல்லும்போது தம்பியைப் பார்த்து ''திருவாமாத்தூர் முத்தாம்பாள் என்னை என்ன துரத்திக் கொத்துவாள் என்று சத்தியம் செய்ய அழைத்தாய்?'' என்று தமையன் ஆணவத்துடன் கூறினான். அவ்விடமே கரும்பாம்பொன்று தோன்றி அவனை அழித்து விட்டது.

அத்தகு தெய்வம் இன்றும் பலருக்கும் குல தெய்வமாக விளங்குகிறது. கரும்பாம்பு தோன்றி வஞ்சகனை அழித்த இடம் விழுப்புரத்திலிருந்து செஞ்சிக்குச் செல்லும் பாதையில் தும்பூரையடுத்துள்ளது. நாகம்மை கோயில் என்ற இவ்விடத்தில் பாம்பு படமெடுத்துள்ள வடிவில் பெரிய சிலையின் தலைப் பகுதி மட்டும் தெரியும் அளவு காணப்படுகிறது. இதன் வால் திருவாமாத்தூர் முத்தாம்பிகையம்மன் மார்பிடத்திருப்பதை இன்றும் காணலாம்.

இவ்வாறு பல்லாற்றானும் பெருஞ்சிறப்புற்று விளங்கும் திருவாமாத்தூர் அருள்மிகு முத்தாம்பிகையுடனுறை அபிராமேசுவரப் பெருமான் திருவருள் நலம்பெற, ஒருமுறையேனும் அறம் தழைக்கும் திருவாமாத்தூர் சென்று நாமும் வழிபடலாமே.

# சொர்க்கமும் நரகமும்

சுவாமி சிவானந்தர்

புராண நூல்கள் மிகவும் நம்பத் தகுந்தவை யல்ல என்றும் அவற்றுள் பற்பல விஷயங்களைக் குறித்தும் அளவுக்கு மீறிக்கூறப்பட்டுள்ளனஎன்றும் தற்காலத்தில் சாதாரணமாகக் கேள்விப்படுகின்றோம். மக்களிடையே உற்சாகத்தையும் பயத்தையும் ஏற்படுத்துவதற்காகவே புராணங்களில் சொர்க்க நரகங்களைக் குறித்து வர்ணிக்கப்பட்டிருக்கிறது என்று இந்தவிமரிசகர்கள் கூறுகிறார்கள். ஏதாவதொரு விஷயத்தைப் பற்றி விமரிசனம் செய்வதற்கு அதிகப் புத்தி தேவையில்லை. எந்த ஒரு விஷயத்தையும் அதன் சாதகபாதகங்களை ஆராயாமல் அதைக் கண்டிப்பது என்பது மனித மூளையின் இயற்கைச் சுபாவமாகும். ஆனால் சற்றே சிந்தித்துப் பார்ப்பார்களே யானால் அத்தகையவர்களும் புராணங்களின் விசேஷத்தன்மையைத் தெரிந்து கொள்வார்கள். குறிப்பிட்ட கருத்துக் கொண்டு சில விஷயங்களின்மீது வேண்டுமென்றே அதிகமான வற்புறுத்தலை ரிசிகள் தெரிவித்திருக்கிறார்கள். வினை மற்றும் அதன்விளைவுகளின் விவரமான விளக்கத்தின் பின், கம்பீரமான மனோ விஞ்ஞான ஆராய்ச்சியும் உட்பார்வையும் மறைந்து கிடக்கிறது.

ஆத்மானுபதி அடையப் பெறாத வரையிலும் ஒவ்வொரு மனிதனிடத்தும் மனிதத் தன்மை மற்றும் மிருகத் தன்மை இரண்டிற்குமிடையே போராட்டம் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. தெய்வீகத் தன்மையை மனிதன் பூர்ணமாக அடையாத வரையிலும் அவனிடம் நிலவும்மிருகத் தன்மை வேருடன் மாய்வதில்லை. மனிதன் இருக்கும் வரை அவனுடன் மிருகமும் இருந்து வருகிறது. சில சமயம் மனிதத்தன்மை மேலோங்கி நிற்கும். சில நேரம் மிருகத் தன்மை உயர்ந்து நிற்கும். இவ்விரண்டு தன்மைக்கும் மேற்சென்று தெய்வீகத் தன்மையில் மனிதன் நிலைத்து விடுகிறபொழுது அவன் 'மனித-மிருகாதீதன்' ஆகி விடுகிறான். அதன் பின்னர் மனிதத் தன்மை மற்றும் மிருகத் தன்மை இரண்டிற்கும் இடையே போராட்டம் நடப்பதில்லை. இப்பொழுது தெய்வீக தேகியே தேகத்தின் மீது ஆட்சி புரியத் தொடங்கி விடுகிறான்.

இவ்வரிய நிலையை அடையாத வரையிலும் மனித மிருக உணர்ச்சிகளுக்கு மனிதன் மாறி மாறி இரையாகிக் கொண்டே வருகிறான். சில நேரங்களில் அவன் பெருந்தன்மையுடன் விளங்குகிறான். மற்றும் சில நேரங்களில் அவன் சிறுமையே உருவமாகக் காட்சியளிக்கிறான். உயரிய மனிதத் தன்மைக்கும் கீழ்த்தரமான மிருகத் தன்மைக்கும் இடையே அவன் ஊசலாடிக் கொண்டே இருக்கிறான். அவன் உடலுள்ள இவ்விருவகைத் தன்மைகள் வெளித் தூண்டுதலுக்குத் தக்கவாறு தத்தமக்குரிய முறையில் பிரதிச் செயலை விளைவிக்கின்றன. குறிப்பிட்ட வெளித் தூண்டுதல் அதற்குரிய விளைவை ஏற்படுத்துகிறது. எவனிடம் சத்துவ குணம் சிறந்த முறையில் வளர்ந்து விலாசமடைந்துள்ளதோ, எவன் பண்பும் பணிவும், ஒழுக்கமும் நிறைந்தவனாக விளங்குகிறானோ அவன் கீழான உணர்ச்சிகளுக்கும் தூண்டுதல்களுக்கும் இரையாகி நிற்க மாட்டான். முன்னால் ஏற்பட்டுள்ள பதிவுகள் காரணமாக அபூர்வமாக ஏதாவதொரு சமயம் கீழ்த்தரஉணர்ச்சிகள்அவனை ஆட்கொள்ளத் தடைபடுகின்றன. ஆனால், கீழான மனப்போக்குடையவர்களிடம் இத்தகைய தூண்டுதல்கள் விரைவிலேயே கேட்டைவிளைவிக்கின்றன. அதேபோல் உயரிய மனநிலையுடையவர்களிடம் நல்லொழுக்க உணர்வுகள் நன்கு வேலை செய்கின்றன. இவர்களிடம் கீழ்த்தரமான மிருக உணர்ச்சிகள் எவ்வித வேலையும் செய்ய முடியாமல் ஆகிவிடுகின்றன. தெய்வீக எண்ணங்கள் சம்பந்தமாகவும் இதே விஷயம்தான் பொருந்துவதாகும்.

இந்து மதப் புராணங்களில் நரகமும், சொர்க்கமும் ஏற்படுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையும் இவ்வரிய கம்பீர உட்பார்வையும் ஊடுருவி நோக்கும் மனோ விஞ்ஞானமுமேயாகும். இனிய குழலோசையால் எருமையைச் செலுத்த முடியாது என்பதை அவர்கள் அறிவார்கள். அதைக் கம்பால் அடித்தே செலுத்த வேண்டும். சேதுவைத் தாண்டிச் செல்ல எண்ணிய இராமபிரான் சமுத்திர ராஜனை முதலில் எவ்வளவோ வேண்டிக்கொண்டும் பயன்படாததால் கோபம் மிகுந்து அம்பைக் கையில் எடுக்கலானார். அடுத்த நிமிடமேஅங்கே கூப்பிய கையுடன் தோன்றி நின்றான் ஸ்ரீராமன் முன் சமுத்திரராஜன்! அதே போன்று மக்களை நல்வழிப்படுத்துவதற்காக புராணகால முனிவர்கள் உயரிய வாழ்க்கையால் ஏற்படும் சொல்வதற்கரிய நலன்களை வர்ணித்திருக்கிறார்கள். இங்கு மனிதனிடம் மனிதத் தன்மை வளருவதற்குரிய வழிமுறைகளை அவர்கள் வகுத்துக் கூறியுள்ளனர். ஆனால் மனிதன் கொடிய பாபத்தை விளைவிக்கும் மிருகச் செயல்களில் ஈடுபடும் பொழுதெல்லாம் அவர்கள் இரண்டாவது முறையை மேற்கொண்டார்கள். மிருகத்தைத் தண்டித்தலின் மூலமாகவே அடக்கி நிறுத்த முடியும். எனவே வினைக்குரிய விளைவுகளை அவர்கள் விரிவாக விளக்கியுள்ளனர். அவர்கள் எதையும் பொய்யாகவோ அல்லதுமிகைப்படுத்தியோ கூறியுள்ளதாக நாம் கருதி விடக்கூடாது. முக்கிய விஷயங்களை வலியுறுத்தியுள்ளதோடு நியதிக்கும் புறம்பாகச் செல்கிறவர்களுக்கும் பல்வேறு தண்டனைகளைக் குறித்தும் வர்ணித்

திருக்கிறார்கள். பாபம் புரிகிறவனுடைய தீய செயல்களின் கொடும் விளைவுகளைக் குறித்து ஜீவர்களை அவர்கள் எச்சரித்துள்ளனர். வேண்டுமென்றே ஆத்மீக ஒழுக்க நியதிகளைப் புறக்கணித்துத் தீயவழிச் செல்கிறவர்களை எதிர்நோக்கி நிற்கும் பல்வேறு தண்டனைகளை விளக்கமாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வுண்மையைத் தெளிவுபடுத்துவதற்காக பாபத்தின்பலனை பெற்ற பலருடைய உதாரணங்களையும் கூறியுள்ளனர். நகுஷன், ஜயவிஜயர்கள், புகழ்பெற்ற கஜேந்திரன் மற்றும் பலருடைய உதாரணங்களால் புராணங்கள் நிறைந்துள்ளன. இவர்கள் கீழ்ப் பிறவிகளில் பல காலம் மிகவும் அவதிப்பட்டுள்ளனர்.

இத்துடன் அவர்கள் நின்றுவிடவில்லை. பாவச் செயல்களின் பலன்களை உதாரணத்துடன்கூறுவது மட்டும் போதுமென அவர்கள் எண்ணவில்லை. ஒப்பிட்டுப் பார்க்கும்போது கேடற்றதாகத் தோன்றும் நல்லுணர்ச்சியாகிய பற்றுதல்போன்றவையும் மனிதனுக்குப் பெரும்கஷ்டங்களைதோற்றுவிக்கின்றன என்பதற்கும் சில திருஷ்டாந்தங்களை தெரிவித்திருக்கிறார்கள். ஜடபரத முனியின் பூர்வீக வாழ்க்கை இம்முறையே அமைந்ததாகும். பொய்யோடிடைமிடைந்த மெய்க்கூற்றை அகஸ்மாத்தாகக் கையாண்டதற்காக யுதிஷ்டிரர் ஒரு நிமிட நேரத்திற்கு நரகத்தீயைக் காணவேண்டி வந்தது.

பாக்கியவசமாகவோ துர்பாக்கியவசமாகவோ எண்ணற்ற புராணங்களுள் வெகு சிலமட்டுமே பெரும்பான்மையோரால் இன்று படிக்கப்பட்டுவருகின்றன. அங்ஙனம் புராணங்களைப் படிக்கவோ, படிப்பதைக் கேட்கவோ செய்யும் ஒரு சிலபக்தர்கள் நாடெங்கும் எல்லோராலும் அறியப்பட்டு வரும் நான்கைந்து சைவ,வைணவ புராணங்களைத் தவிர அதற்கப்பால் அறிந்தவர்களாக இல்லை. கந்த புராணம், மார்க்கண்டேய புராணம், விஷ்ணு புராணம் அல்லது ஸ்ரீமத் பாகவதம் இவற்றுடனேயே புராணப் படிப்பு நின்றுவிடுகிறது என்று கூறலாம். இங்கு நாம் சாதாரண மக்களையே குறிப்பிடுகிறோம். பண்டிதர்களையோ, வைதிகர்களையோ அல்ல. இதனால் கர்மம் அல்லது வினை மற்றும் கர்ம பலமாகிய சவுக்கினால் மனிதனுக்குள்ளிருக்கும் மிருகத் தன்மையைச் சன்மார்க்கத்தில் செலுத்த முடியவில்லை. இதன் விளைவாக இன்று மிருகத்தன்மையே மேலோங்கி நிற்கிறது; ஆட்சி புரிகிறது.

தண்டனை விதிகளைக் குறித்த அறிவில்லாத நிலையிலும் குற்றவாளிக்குத் தண்டனை கிடைக்கவே செய்கிறது. கன்னக்கோல் வேலையில் ஈடுபட்ட திருடன் சிறைக்குச் செல்வது உறுதி. கொலை புரிகிறவன் தூக்கு தண்டனை அடைவது இயல்பு., இதே போன்று பாபத்தொழிலில் ஈடுபடுகிறவனுக்கு உரிய தண்டனை கைமேல் கிடைக்கிறது. தப்பிக்க முடியாத இவ்வரிய நியதியைக் குறித்த உண்மை ஒருவனுக்குப் புலப்பட்டுவிட்டதானால் அவன் அதர்மத்தைத் தவிர்த்துவிட்டு தர்மத்தை கைகொள்ளத் தலைப்படுவான் என்பது உறுதி. தற்கால மனிதன் 'கண்ணால் காண்பதையே நம்பும்' கொள்கையைக் கொண்டு நிற்கிறான். தர்மத்திற்கு மாறாகச் சென்ற குற்றத்திற்காக ஆஸ்பத்திரிகளில் மக்கள் படும் அவதி இந்தப் பயங்கர உண்மையை சதா நிரூபித்துக் கொண்டிருக்கிறது. இதை ஒரு தடவை பார்த்துவிட்டால் உண்மை தெரியவராதோ?

## பொன்மொழி

**உங்களுக்குப் பின்னால் நீங்கள் வாழ்ந்து மறைந்ததற்கு அறிகுறியாக எதையாவது விட்டுச் செல்லுங்கள். அப்படி இல்லாவிட்டால் இந்த மரம், கல் முதலியவற்றுக்கும் உங்களுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?**

—சுவாமி விவேகானந்தர்

---

நம்மை அவதிப்படுத்தும் பிணிகள், இவ்வுலகில் நாம் எடுக்கும் பிறவிகள் அனைத்தும் முற்காலங்களில் நாம் செய்த வினைகளின்விளைவுகளேயாகும். எந்தச் செயலுடையவும் பலன்கிட்டத்தான் செய்யும். எந்த வினையும் பலனற்றுப் போவதில்லை. தீயவினைகள், செய்கிறவனுக்குத் தீமையை விளைவிக்காமற் செல்வதில்லை. கவனக்குறைவின் காரணமாகச் செய்யப்பட்ட பாபச் செயல்களினால் பரிதாபமான நிலைகள்பலவற்றில் வாழ நேரிடும் மனிதனின் பல்வேறு நிலைகள்இங்கு தெரிவிக்கப்படுகின்றன.

நவநாகரீகப் பகுத்தறிவுவாதி எண்ணுவது போன்று நரகம் கற்பனையின் விளைவான கட்டுக்கதையல்ல. அனுபவத்தை மட்டும் நம்புகிறவன் புலன் வழிச் சேர்க்கையினால் ஏற்படும் அனுபவத்தையே நம்புகிறான். அவன் தனது புத்தியின் ஆணைக்கு மேற்பட்டுச் செல்ல முடியாதவன்எனத் தன்னைக் கருதுகிறான். தன்னால் எண்ண முடிவதற்கும் அப்பாலுள்ள உண்மைகளைப் புறக்கணிப்பதற்கு மனிதனிடம் தக்க காரணம் இருக்கிறது எனக் கூறமுடியாது. இந்தப் பூவுலகம் மட்டுமே, உண்மையானது என்றும் ஏனையவை வெறும் தோற்றங்களே என்றும் வலியுறுத்த நமக்கு உரிமை கிடையாது. வானத்தில் தோன்றும் நட்சத்திரங்கள் நம் கண்களுக்கு மின்மினுப்பூச்சி போன்று புலப்படுகிறது என்பதனால் அவை அங்ஙனமே சிறிய உருவமுடன் அமைகின்றன என்பதாகாது. நான் அமெரிக்காவைப் பார்த்ததில்லை என்பதனால் அத்தகைய நாடு கிடையாது என்று கூற எனக்கு உரிமை ஏது? உருவிலும் தன்மையிலும் முற்றிலும் வேறுபட்ட உலகங்கள் வெகு தொலைவில் உள்ளன என்பதை ஒப்புக்கொள்வதற்கு பகுத்தறிவு ரீதியாகவும் நுண்ணறிவு ரீதியாகவும் சான்றுகள் உள்ளன. நமது உலகம் ஒரு அணுமாத்திரமே என்றும் இதைவிடப் பெரிய அளவில் எண்ணற்ற உலகங்கள் நம் பார்வைக்கும் அப்பால் இருக்கின்றன என்றும் 'யோக வாசிட்டம்' என்ற நூல் தெரிவிக்கிறது. நமது உலகம் ஒரு குறிப்பிட்ட ரகத்தைச் சேர்ந்தது. இதைவிட வேறான பல ரகங்களில் பல உலகங்கள் இருக்கின்

றன என்று 'வாசிஷ்டம்' வர்ணிக்கிறது. செம்பு இரும்பு தங்கம் முதலிய பல்வேறு உலோகப் பொருள்களாலும் தண்ணீர் பால் முதலியவைகளாலும் ஆக்கப்பட்டு பாம்புகள், மிருகங்கள் பிசாசுகள் முதலியவை வசிக்கக்கூடியதுமான உலகங்களும் இருக்கின்றன என்ற யோகவாசிஷ்டத்தின் கூற்றைப் புறக்கணிக்க நம்மிடம் பிரமாணமேது? எல்லா உலகங்களிலும் மக்களே வாழவேண்டும் என்ற அவசியமில்லை. அங்கெல்லாம் இவ்வுலகிலுள்ளதைப் போன்ற சூழ்நிலைகள் இருக்கத்தான் வேண்டும் என்பதுமில்லை. இவ்வண்டம் எல்லையற்ற பரமாத்மனின் படிப்படியான வெளிப்படுகையாகும். சைதன்யத்தின் பல்வேறு அம்சங்களில் படிப்படியாகப் பரமாத்மன் வெளிப்பட்டுத் தோன்றுகிறார். அவர் எல்லா ஜீவர்களுடைய இருப்பிடமாக அமைகிறார். எல்லா அனுபவங்களுடையவும் உற்பத்தி ஸ்தானமும் அவரேதான். எல்லையற்ற வஸ்து மாபெரும் அற்புதத்தன்மை வாய்ந்தது. அதன் கருப்பையில் என்னவெல்லாம் வாசம் செய்கின்றன என்பதை நம்மால் தெரிவிக்க முடியாது. அதில் அடங்கியுள்ள எண்ணற்ற உலகங்களில் நாமும் நாம் வாழும் உலகமும் ஒன்று. எல்லையற்ற வஸ்துவில் பல பரிவாரங்கள் இருக்கின்றன. பூமி நரகம் சொர்க்கம், மனிதன், மிருகம், தேவதை, தைத்தியன் இவை அனைத்தும் அதன் வெவ்வேறு குழந்தைகளே யாவர். ஜடபதார்த்தத்திலிருந்து தூய ஆனந்தம் வரை பரமதத்துவம் எங்கும் வியாபித்து நிற்கிறது. இதற்கிடையேதான் அநேக உலகங்கள் நிலவுகின்றன. உயிர்ப் பிராணிகள் தங்களுடைய விசேஷ கர்மபல போகத்தின் பிரகாரம் அமையும் சூழ்நிலை நிலவும் ஏதாவதொரு உலகில் பிறக்கின்றன என்று கூறப்படுகிறது. நெருப்பினால்தான் உஷ்ணத்தைத் தர முடியும். உணவினால்தான் பசியைத் தீர்க்கமுடியும். அதே போன்று குறிப்பிட்ட செயல்களுக்குரிய விளைவுகளை குறிப்பிட்ட சூழ்நிலையால்தான் அளிக்க முடியும். இத்தகைய தண்டனையைப் பெற உருவத்தையுடைய ஏதாவது தெய்வத்தின் கோபம் வேண்டுவதில்லை. ஜீவர்கள் தாங்கள் கர்மானுசாரம் பல்வேறு அனுபவங்களைப் பெறுகின்றனர். இதேபோன்று, உலகங்களின் தன்மைகள் வேறுபடுகின்றன என்பது மெய்யே எனக்கூறுவதும் பகுத்தறிவுக்குப் புறம்பானதாகாது. உண்மை பார்க்க முடியாதது என்பதை நாம் நினைவிலிருத்த வேண்டும்.

இந்திரலோகம் அல்லது நமது பூவுலகம் எவ்வளவு தூரம் உண்மையோ அவ்வளவு உண்மையானதே நரகலோகமும். இவ்வுலகங்கள் சூஷ்மதையின் அம்சப்படி வெவ்வேறாக இருக்கின்றன. அவற்றின் மூலம் வெளிப்படும் உணர்வு நிலையின் அளவில் அவை வேறுபடுகின்றன.

நூல்கள் பலவற்றில் விரிவாகப் பாபிகள் அனுபவிக்கும் துன்பங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இவற்றை அவற்றிற்குரிய உலகங்களில் பிறந்து அனுபவிக்கவும் செய்யலாம். அல்லது இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளவற்றைப் போன்ற அனுபவங்களை ஜீவனின் எந்த நிலையிலேனும் அதற்கேற்ற சூழ்நிலை பொருந்திய பூவுலக வாழ்க்கையிலும்ஒருவன் அனுபவிக்கலாம். இங்கு நேர்முகமாகவோ அல்லது மற்றவர் மூலமாகவோ ஒருவன் அத்தகைய துன்பங்களை அடைய நேரிடும்.

— — — —



அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி ஆலயத்தில் பட்டாச்சாரியர்களுக்கு வைகானச ஆகமப் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இவ்வகுப்புகளின் நிறைவு விழாவில் ஆணையாளர் திரு தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ. ஏ. எஸ்., இணை ஆணையர் திரு இரா. தண்டபாணி, பி.எஸ்சி., பி.எல். ஆகியோர் கலந்து கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

# வீரவணநாயகன்



விசாகன்

திருவிளங்கு தமிழ் நாட்டின் பெருமை யாராலும் அளந்து கூற முடியாது. மூவேந்தர்களின் சேர சோழ பாண்டிய நாடுகளில் பாண்டிய நாடு தனிச் சிறப்புடையது. சிவபெருமான் சோமசுந்தர பாண்டியன் என்ற பெயருடனும், முருகப்பெருமான் உக்கிரகுமார பாண்டியன் என்றும், உலக மாதாவான உமையம்மை மீனாட்சி என்ற பெயருடனும் அரசு வீற்றிருந்த புண்ணியநாடு. அம்மை கன்னிப் பெண்ணாக இருந்து மதுரையை அரசாட்சி செய்த காரணமாகப் பாண்டி நாட்டிற்குக் கன்னிநாடு என ஒரு பெயர் உண்டு. பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாக, இன்றைய செட்டி நாட்டின் ஒரு ஊராக விளங்கும் புது வயலுக்கு அருகே சாக்கோட்டை என்ற பெயரால் இன்று வழங்கும் பதி, சிவத்தலங்களில் மிக மேன்மையுள்ள ஒன்றான வீரவனம் என அழைக்கப்பெற்றது. தென்னாட்டின் நடமாடும் புத்தகச் சாலையாக, தமிழ்த் தாத்தா என நாம் அழைத்துக் களிக்கும் திரு உ. வே. சாமிநாதனார் போன்ற பலருக்குத் தமிழ் பாடம் கூறிய அறிவுச் செல்வராக அன்று விளங்கிய மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் வீர வனத் தல புராணத்தை சுமார் 750 பாடல்களில் மிக அழகாக அருளிச் செய்துள்ளார்கள். அறிந்து களிப்போம்!

வீரவனமென்ற அக்காட்டின் ஒரு புறத்தில் வேடன் ஒருவன் வசித்து வந்தான். அவன் பெயர் வீரன். ஒருநாள் அவன் கிழங்கு தோண்ட எண்ணித் தனது வளர்ப்பு நாயுடன் காட்டில் புகுந்தான். வீரைமரம் (நெல்லி வாழை முந்திரி முதலானவற்றையும் இப்பெயர் கொண்டு அழைக்கும் வழக்கம்) ஒன்றின் அடியில் ஒரு புற்று இருந்தது. அதற்குள்ளிருந்து கொடி கிளம்பி அந்த மரத்தைச் சுற்றிப்படர்ந்து சென்றிருந்தது. வள்ளிக் கொடியின் அடியில் வெட்டினால் வள்ளிக்கிழங்கு கிடைக்கும என்ற எண்ணத்தில் புற்றின் மீது தன் கையிலிருந்த இரும்பு ஆயுதத்தால் அடிக்க, புற்றுக்குள்ளிருந்து இரத்தம் வரலாயிற்று. புற்றுக்குள் இருந்த ஒரு சிவலிங்கத்தின் மீது அடிபட, அதன் தலையிலிருந்து இரத்தம் வந்ததைக் கண்ட வீரன் பயந்து மூர்ச்சையானான். அவனது நாய் தன் தலைவனுக்கு ஏதோ நேர்ந்துவிட்டதே என்னத் தடுமாறியது. தனது தலைவன் மூர்ச்சையுற்றுக் கிடந்த நிலைகண்ட நாய் என்னென்ன தன்மையில் தனது கவலையைக் காட்டியது.

''விழிகளும் மறைந்து மண்மிசைக் கிடக்கும்
வேடர் கோமகன் திறம் நோக்கி
வழி தொடர்ந்தடுத்த ஞமலி மற்றிவர்க்கு
வந்ததோர் தீங்கெனக் குறித்தாங்கு

கழி துயருழக்கும்; முகத்தினை மோக்கும்;
மலரும் பஃரறஞ் சூழும்
ஓழியும் முன் காலால் வருடும்; மிக்கலறும்
முகம் புலர்ந்தெங்கணும் நோக்கும்''

என்று வரைபடமாகவே காட்டுகிறது இக்கவிஞரின் மந்திரக் கவிதை. நாயின் பெருமையறிந்த ஒரு செல்வந்தர் தமது நாயின் சிலையை வடித்துத் தனது வீட்டின் முன் வைத்துத் தன் வளர்ப்பு நாயின் நன்றியை மேனாட்டில் உணரச் செய்தார் என ஒரு வரலாறு உண்டு. கடமை (Duty), தலைவனுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் தன்மை(Obedience), நன்றியுடைமை (Gratitude) என்ற மூவகைக் குணங்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டே அந்த பிராணிக்கு DOG எனப் பெயரிட்டனர் என்பர். இந்தச் சொல்லைதிருப்பி எழுதினால் GOD என்ற நல்ல சொல்லாகக் கடவுள் என்று வந்து விடுகின்றது. G என்பது Generator என்ற படைத்தல், O—Organiser என்ற காத்தல் தொழிலையும், D—Destrution என்ற அழித்தல் ஆகிய இறைவனின் முத்தொழில்களையும் காட்டவே ஆங்கிலேயர் இறைவனை GOD என அழைத்தனர். கடமை, கட்டுப்படல், நன்றி ஆகிய மூன்றுமே தெய்வீக குணங்கள் ! இனி நம்மவர் சண்டையிடும்போது ''நாயே'' என்ற சொல்லை வசை மொழியாகப் பயன்படுத்தாது இருப்பாராக! மனிதனை, கடமை செய்யாதவனை, எவருக்கும் கட்டுப்படாதவனை, நன்றியற்றவனை. நாயே என அழைத்தால் அது நற்குணங்கள் உள்ள நாய்க்கு அவமானமன்றோ!

கடமை தவறாத நாய் வீரனின் மனைவியின் இருப்பிடம் சென்று, குலைத்து எப்படியோ சாடை காட்டி, அவளைத் தன் தலைவன் இருக்குமிடத்திற்கு அழைத்து வந்து விட்டது. பதைத்து ஓடி வந்த அந்தப் பெண் கணவனுக்கு ஏதாவதுஆபத்து நேர்ந்து விட்டதோ என பயந்து அவனைக்காண அவன் மூர்ச்சையுற்றிருப்பது கண்டுஆறுதலடைந்து என்ன நடந்ததோ என ஆராய்ந்து, கரையான் புற்றைக் கையால் தோண்டிப் பார்க்க, சிலலிங்கத் திருவுருவையும் அதனைத் தன் கணவன் அறியாது இரும்பினால் அடிக்க இரத்தம் வந்தது என்றும் அறிந்தாள்.

''அடுத்தவர் தமைக் காத்து ஆரருள் கொழிக்கும்
அம்மையப்பருக்கு இது தகுமோ?
கடுத்த நஞ்சருந்திக் கடவுளர்ப் புரந்த
கருணையாளருக்கு இது தகுமோ?
எடுத்த வெஞ்சீற்றக் கூற்றுதைத்து
ஒரு சேய் இவர்ந்தளித்தவர்க்கு இது தகுமோ?
உடுத்த நீர் ஞாலம் ஒருங்குவந்தேத்தும்
உமாபதியார்க்கு இது தகுமோ?''

தம்மையடைந்தவரைக் காக்கும் தயையுள்ள இறைவனுக்கா இரத்த காயம்! பாற்கடலில் வந்த நஞ்சையருந்தி தேவரைக் காத்த பெருமானுக்கா இந்தக் காயம்! யமனை எட்டி உதைத்து ஒரு குழந்தையான மார்க்கண்டனை காத்த பெருமானுக்கா இந்த விபத்து! உலகம் சேர்ந்து வந்து வணங்கும் அம்மையப்பனுக்கா இப்படி ஒரு நிலை!'

என இரங்கியழுதாள் அப்பெண்மணி. அவருக்கு இறைவன் காட்சியளித்தார். ''எம்பெருமானே! என் கணவன் அறியாது செய்த குற்றத்தை மன்னித்து அடியேனுக்கு மாங்கல்யப்பிச்சை அளிக்க வேணும். இரதிதேவிக்கு மன்மதனைத் திருப்பி அளித்த மாதிரி எனக்கும் கருணை செய்ய வேணும். நானும் என் கணவனும் என்றும் உம் அடிமைகளாகவே இருப்போம்'' என வேண்ட, இறைவனருளால் வீரன் மூர்ச்சைத் தெளிந்து எழுந்தான். 'கிழங்கு தோண்டுகிறேன் என நம் இறைவனது தலையில் இரும்பினால் அடித்துக் காயப்படுத்திவிட்டீரே'' என வீரன் மனைவி கூற, அவன்பயமும் துக்கமும் கொண்டு

''என்னை ஆள்தர இக்கானகத்திருந்தார்;
இருந்ததை அறிந்திலன் அந்தோ!
பொன்னை நேர்சடிலத்து இறைவனார்
இங்கு பொருந்தியதறிந்திலன் அந்தோ!
அன்னையே பொருவும் அறவனார் இங்ஙன்
அமர்ந்ததை அறிந்திலன் அந்தோ!
முன்னை ஊழ் கொல்லோ? பலரும் உள் இரங்க
முடித்தனன்! முடிந்திலன் அந்தோ!''

என்னை ஆட்கொள்ள இறைவன் இங்கிருந்ததை அறியாமல் போனேனே! கங்காதரக் கடவுள் தாய் போன்ற கருணையுள்ள பெருமான் இங்கிருந்ததையறியாமல் யாவரும் கண்டு கலங்கும்படி இறைவனைக் காயப்படுத்திவிட்டேனே! நான் அழிந்து போகக்கூடாதா? என்றெல்லாம் இரங்கிப் புலம்பினான் வீரன்.

இறைவன், வீரனையும் அவன் மனைவியையும் பார்த்து ''உங்களை ஆட்கொள்வதற்காகவே இவ்வாறு மறைந்திருந்து அடிபட்டேன். என் தலையில் அடிபட்ட தழும்புள்ளதால் இந்தத் தலத்தில் எனக்குத் திருமுடித்தழும்பர் என்று பெயர் ஏற்படும். என்னை அடித்துத் தழும்பு உண்டாக்கினோம் என வருந்தாதே! அடிவாங்குவதும் தழும்பு உண்டாக்கிக் கொள்வதும் எனக்கு வழக்கமே! மதுரையில் அரிமர்த்தன பாண்டியன் பிரம்பாலடித்தான்! அருச்சனன் பாசுபதாத்திரம் வாங்கும்போது யாரென அறியாமல் வில்லால் என்னை அடித்தான்! சாக்கிய நாயனார் தினமும் கல்லால் அடித்தார். கண்ணப்பன் தன் செருப்புக்காலை என் முகத்தில் வைத்தான்! எத்தனையோ தழும்புகள்! இதெல்லாம் எனக்கு விளையாட்டுகள்! என்னையும்என் தேவியான உமையாம்பிகையையும் வழிபட்டுப் பின்னர் நம்முடைய உலகம் வருக!'' எனக்கூறி மறைந்தருளினார்.


இத்தகைய கருணையுள்ள வீரவனநாதர் வெளிப்பட்ட காலத்தில் பூம்புகார் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு கண்டன் என்ற ஒரு சோழன் அரசு புரிந்து வந்தான். திடீரென அவனுக்குக் குட்ட நோய் உண்டாயிற்று. கவலையே உருவாக மாறிய அவனைச் சிவத்தலங்களைத் தரிசித்தால் அவனது நோய் நீங்கும் என மந்திரிகளும் மற்றவர்களும் கூற அவன் தலயாத்திரை செய்யலானான். பல தலங்களையும் வணங்கிய சோழன் இராமேச்சுரம் செல்லும் வழியில் தற்செயலாக வீரவனத்தினருகில் களைப்பாற வேண்டுமெனத் தங்கினான்.

இறைவனருள் பெற்ற வீரன் என்ற வேடன் ''சிவபெருமானுக்கு அடியார்கள் கோயில் கட்டுவார்கள். நான் அவர் இருந்த புற்றை அழித்தேன். எம்பெருமான் வெட்ட வெளியிலேயே இருக்கிறாரே'' எனத்தினமும் வருந்தி வணங்கிக் கொண்டிருந்தான். இறைவன் அவனது கனவில் தோன்றி 'கவலையுறாதே! இங்கு அருகாமையில் சோழன் ஒருவன் தங்கியுள்ளான். அவனிடம் உன் மனக்குறையைக் கூறு. அவன் நமக்குக் கோயில் கட்டுவான்'' எனக்கூறி மறைந்தார். வீரன் உடனே எழுந்து சோழனிருக்குமிடம் வந்து 'இந்த வீரவனத்தில் இறைவன் கோயில் கொண்டுள்ளார்'' எனக்கூறினான். 'அதைக் கேட்டவுடன் அந்த சோழன் காதிலிருந்த குட்ட நோய் நீங்கியது. 'தோற்றம் கேட்ட சந்தமார் செவி வெண்குட்டம் தவிர்ந்தது-'' அந்தப் பெருமானைக் காண வேண்டும் என எழுந்ததும் காலிலிருந்த குட்டம் நீங்கியது. ''ஆயமாலிங்கம் எங்கே அமர்தரும் காட்டுகென்று தூயகாவலன் எழுந்தான். எழுதலும்துணைத்தாள் குட்டம் போயதால்'' என்கிறார் கவிஞர். ஓடிவந்து சிவலிங்கப் பெருமானைத் தழுவிக் கொள்ள உடலிருந்த வெண்குட்டம் பூராவும் நீங்கியது. ''என்னைக் கோபத்தோடு அழைக்க வரும் யமதர்மனின் கண் சிவப்பும் எனக்கு வராது. மரணபயம் தீர்ந்தேன். என்னுடைய ஆணவமான கறுமையும் தீர்ந்தது.'' எனக் கூறி மன்னன் மகிழ்ந்தான். காட்டையழித்து ஊர் உண்டாக்கினான். சிவபெருமான் ஓரிடத்தில் மலர்களைத் தூவி அடையாளம் காட்ட, அங்குச் சிவகங்கை என்ற தீர்த்தத்



தையும் உண்டாக்கினான். இதைச் சோழன் குளம் எனவும் அழைப்பர். ''வருடத்திற்கு ஒரு முறை நீ என்னை வந்து தரிசித்தால் முன்னூற்று அறுபத்தைந்து நாளும் பூஜித்தபலனையளிப்போம்'' என இறைவன் கூறிச் சோழனை அவனது ஊருக்கு அனுப்பி வைத்தார். சோழனுக்கு இறைவனருளால் வீரசேகரன் என்ற புதல்வன் பிறந்தான்.

வீரை என்பது வாழை மரம் என்பர்,பாண்டியர்களில் சுகுண பாண்டியன் வீர வனத்திற்கு வந்து சிவபெருமானைத் தரிசித்து, ''இந்தத் தல விருட்சமான வாழை பலாவாக மாறினால் இது மிகுந்த சக்தி வாய்ந்த தெய்வம் எனலாம்'' என எண்ணியபோது, திடீரென அது பலாமரமாக மாறி உலகு பூராவும் அதன் மணம் வீசியது. பாண்டிய ராசன் ''இறைவனைச் சோதித்துக் குற்றம் செய்தோமோ?'' எனக் கவலைப் பட்ட காலத்தில்



மகாபண்டிதர் மீனாட்சி சுந்தரனார்

''பாண்டிய! கவலையுறாதே! இந்தப் பலாப் பழத்தை அனைவரும் உண்ணலாம். எமது பெருமையையும் சக்தியையும் நீ உலகிற்கு காட்ட விரும்பியே இவ்வாறு எண்ணினாய்என்பதுநமக்குத் தெரியும்'' என்றார். அனைவரும்பலாப் பழத்தை உண்ட பின்னர்,பலாப்பழம் பழைய மாதிரி வாழை மரமாக நின்றது. பலாப்பழத்தை உண்டவுடன் பாண்டியனை வெகு நாள் வருத்திய வயிற்று நோய் தீர்ந்தது.

குபேரன் வீரவனத்தில் நூறு வருட காலம் தவஞ்செய்ய, இறைவன் குபேரனுக்கு பெருஞ் செல்வத்தையும் புஷ்பக விமானத்தையும் நர (மனிதன்) வாகனத்தையும் அளித்தார். அளகாபுரி வேந்தனான குபேரனுக்கு அருள் புரிந்தமையால் வீரவனத்திற்கு அளகாபுரி என ஒரு பெயர் உண்டாயிற்று.

மகப்பேறில்லாது வருந்திய வேளாளர்ஒருவர் தன் உடைமைகளையெல்லாம் விற்றுவிட்டுக் காசி செல்லப் புறப்பட்டார். தன்னிடமிருந்த பசுக்களில் பத்துப் பசுக்களை ஒரு அந்தணருக்குத் தானம் செய்துவிட்டு வேறு பத்துப்பசுக்களை ஒரு இடையனுக்கு விற்றுவிட்டுக் காசி சென்றார். அந்தணரின் பசுக்கள் பழக்கத்தின் காரணமாக இடையனிடம் மேய்ந்து கொண்டிருந்த பசுக்களுடன் சேர்ந்துவிட்டன. பிராமணன் தன் பசுக்களை அழைத்து வரமுயற்சிக்கும்போது, இடையன் எல்லாப் பசுக்களும் என்னுடையனவே. இவருக்கு ஒன்றும் கிடையாது'' என்று கூறி விட்டான். பாண்டியன் இடையனை அழைத்து ''சோழ தீர்த்தத்தில் இறங்கி நின்றுகொண்டு பிராமணனுக்குப் பசுக்களே கிடையாது. எல்லாம் என்னுடையது'' என்று கூறும்படி சொன்னார். இடையன் அவ்வாறே செய்ய திடீரென அவன் கண்பார்வையை இழந்தான். அலறினான். பிறகு உண்மையை ஒப்புக் கொண்டான். தன்னை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டு மீண்டும் ஒரு முறை சோழ தீர்த்தத்துள் மூழ்க அவன் கண்பார்வை பெற்றான்.

''முன்னும் இத்தீர்த்த நீருள் முழுகென
அரசன் கூற
இன்னும் என் வருங்கொலோ என்று எண்ணி
அச்சுற்றெழுந்து
பன்னும் அத்தொறுவன் மூழ்கிப் பார்வையோரி
ரண்டும் பெற்று
மின்னுவெண்கமலைத் தண்டியடிகள் போல்
மேலெழுந்தான்''.

பார்வையற்ற தண்டியடிகள் கமலாலயத்தில் மூழ்கி எழுந்தபோது கண்பார்வைபெற்ற மாதிரி இவனும் வந்தான் என்கிறார்.

பிருகு முனிவர் திருமாலை பத்துப் பிறவிகள் எடுக்குமாறு கூறினார். திருமால் இத்தலத்தையடைந்து வீரவனப்பெருமானை வணங்க 'உனது பத்துப் பிறவிகளும் உலக நன்மைக்காக இருக்கட்டும்'' என அருள் புரிந்தார். இராமாவதாரத்தில் இராமபிரான் வீரவனப்பெருமானை வணங்கி இராவணனை வெல்ல ஆற்றல் பெற்று வீரராகவன் எனப் பெயர் பெற்றான். சாதாரண வேடனிலிருந்து உலகநாதனான இராமபிரான் வரை தக்கவருக்குத் தகுந்தபடி அருள் புரிந்த உடையாம்பிகை உடனாய வீரவனப் பெருமானைக் கண்டு தரிசித்து அவனருள் பெற்று உய்வோமாக!

காமேவு திருவீரை நகர் வாழ்க!
உமையாண்டாள் கருணை வாழ்க!
பாமேவு வெண்ணீறும் கண்மணியும்
ஐந்தெழுத்தும் பரவி வாழ்க!
தேமேவு வீர சேகரர் வாழ்க!
அவரடியார் செறிந்து போற்றப்
பூமேவு மணி மன்றுள் இனிதெடுத்த
குஞ்சிதச் செம்பொற்றாள் வாழ்க!

## மனத்தூய்மைக்கு மருந்து

நம் வீட்டில் பயன்படுத்தும் பாத்திரங்களைத் தினம்தோறும் துலக்குகின்றோம். அவ்வாறே பற்களையும் தினந்தோறும் துலக்குகின்றோம். தலையைத் தினமும் வாரி ஒழுங்குபடுத்திக் கொள்கிறோம். அதைப் போலவே நம் மனத்தையும் தினந்தோறும் தூசு சேராமல் தட்டிச்சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு இறைவழிபாடே சிறந்த வழியாகும்.

''மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்''

''கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'' —திருவள்ளுவர்.

# கந்தவேள் கருணை



திருமுருக
கிருபானந்த வாரியார்

## -4-

தேவர்கள் முறையிட்டுக் கொண்டவுடன், சிவபெருமான் ''வருந்தாதீர்! இமயமால் வரையில் தவம் புரியும் மரகதவல்லியை மணம் புரிவோம்'' என்று அருள்புரிந்தார். '' அதைக் கண்ணுற்ற ரதிதேவி, கண்ணுதற் கடவுள் முன் வந்து வணங்கி, 'தேவர்கள் தூண்டுதலால்தான் என் பதி மன்மதன் தங்கள் மீது மலர்க்கணைகளை ஏவி அழிந்தார். அவர் செய்த குற்றத்தை மன்னித்து எனக்கும் அருள்புரிய வேண்டும்' என்று முறையிட்டுக் கொண்டாள்.

'குழந்தாய்! பார்வதியை மணம் புரியும் காலத்தில் மன்மதனை உயிர்ப்பித்துத் தருவோம்' என்று சிவபெருமான் கருணை பாலித்தார். ரதிதேவி எம்பெருமானைப் போற்றிக் கயிலை மலைச்சாரல் சென்று உண்ணாமலும் உறங்காமலும் மாதவம் செய்யலானாள். மேகத்தின் வரவுக்காக எதிர்நோக்கி ஏங்கும் மயிலைப்போல் உமாதேவியாரின் திருமணத்தை எதிர்நோக்கினாள் ரதி.

உமாதேவியும் மேகத்தை நோக்கி ஏங்கும் மயில்போல் ஐயனுக்காக ஏங்கித் தவமியற்றிக் கொண்டிருந்தார். ஏக்கங்களை நீக்கும் காலம் வந்தது. சனகாதி முனிவர்க்கு

> நன்னல மைந்தர்காள் ஞானபோதகம்
> சொன்னடை யன்றது துயரம் நீங்கியே
> இந்நிலை மோனமோ டிருந்து நந்தமை
> உன்னுத லேஎன உணர ஓதினான்.

''நன்னலம் உடைய புதல்வர்களே! சிவஞான போதம் சொற்களால் உணர்த்தப்படுவதன்று, துயரம் நீங்கி, மோனநிலையில் இருந்து நம்மை ஒருமை யுணர்வுடன் உன்னுவதேயாகும்'' என்று உணருமாறு ஓதியருளினார்.

மோன அநுபவத்தை உணர்த்தி ஞான போதனையை நிறைவு செய்து தட்சிணாமூர்த்தித் திருக்கோலத்தினின்றெழுந்தார் ஐயன்.

கிழ அந்தண ஒருவர் அம்பாளின் தவச்சாலைக்குச் சென்றார். தவச்சாலையைக் காத்து நின்ற பெண்களிடம் 'தவம் செய்யும் பார்வதியைப் பார்ப்பதற்காக வந்தேன்' என்று கூறினார்.

சேடிகள் உமா தேவியாரிடம் அவரை அழைத்துச் சென்றனர். கிழவேதியரது திருநீறு பூசிய மேனியைக் கண்ட பார்வதி, 'இவர் எம்பிரானுடைய அடியவர்' என்று பக்தியுடன் வழிபாடு செய்தார். அம்பிகையின் தோழி விசயை ஆசனம் ஒன்றைப் போட்டு அதில் அந்தணரை அமர்த்தினாள்.

வேதியர் அம்பிகையை அன்புடன் பார்த்து, 'சின்னஞ்சிறு வயதில் உன் அழகைக் கெடுத்துக் கொண்டும், உடலை வாட்டிக் கொண்டும் யாரைக் குறித்து மாதவம் செய்கிறாய் பெண்ணே?'' என்று கேட்டார்.

பார்வதி விசயையைப் பார்த்து, 'இவருக்கு நீ விடை சொல்' என்று குறிப்பால் கண் காட்டினார். பத்தினிப் பெண்ணுக்கு நாயகன் பெயரைச் சொல்வது மட்டும் நாணமில்லை; அவனைப் பற்றிப் பேசுவதே நாணம். தேவி நமது பெண் மக்களுக்கே காட்டிக் கொடுத்த பண்பு இது.


''சுவாமி! பரமேசுவரரைக் குறித்துஇவர்கள் தவம் செய்கிறார்கள்'' என்று விசயை கூறினாள்.

விசயை கூறியதைக் கேட்டவுடன் ஏதோ பெரிய விசித்திரத்தைக் கேட்டாற்போல் தொண்டு கிழவர் குலுங்கச் சிரிக்கலானார்.

''சுவாமி! ஏன் சிரிக்கிறீர்கள்?' என்றுபார்வதி கேட்டார்.

'பார்வதி! மாலும் அயனும் காணமுடியாத அந்தக் கடவுள் உன் தவத்துக்கு இரங்கி வருவாரா? சந்திரமண்டலத்திற்கு ஏணி வைத்தால் எட்டிவிட முடியுமா? நீ வீணாக உடல்நலத்தையும் கட்டழகையும் பாழாக்கிக் கொண்டு தவம் செய்ய வேண்டாம். உன்னால் சிவபெருமானைக் காண முடியாது'' என்றார் அந்தணர்.

அந்தணரின் பேச்சு எம்பிராட்டிக்குக் கோபத்தை உண்டாக்கியது. 'அயனும் மாலும்' போல் அகந்தையாலா ஆண்டவனை அடைய விரும்புகிறேன்? அன்பாலல்லவா அவனைப் பெற முயல்கிறேன்? அடியாரின் உள் அன்பினை ஆண்டவன் எப்படி மதிக்கிறான் என்பதை அறியாதவராக அல்லவா இருக்கிறார் இக்கிழவர் என்று தேவி எண்ணிச் சினம் கொண்டார். 'பெரியவரே! தங்களுக்கு வயதுதான் ஆகியதே தவிர அறிவு முதிர்ச்சி பெறவில்லை. என்னுடைய இத்தவத்தால் சிவபெருமானை அடைய முடியாது என்றால் அதனால் சிவ்பெருமானையும் விடுவதற்கில்லை ;



தவத்தையும் விடுவதற்கில்லை; இப்போது நான் செய்யும் தவத்தின் தீவிரம் போதாது என்று கருதி அதனை மேலும் கடுமையாக்குவதே வழி. அதில் என் உயிரே போனாலும் சரி'' என்றார்.

முடிவிலாதுறை பகவன் என் வேட்கையைமுடியாது
விடுவன் எனினும் தவத்தினை விடுவேனோ
மிகவின்னம்
கடிய நோன்பினை அளப்பில செய்துயிர் கழிப்பேன்
நான்
நெடிது மூத்தலின் மயங்கினை பித்தனோ நீ
என்றாள்.

''இனித் தண்ணீரும் அருந்தாமல் தவம் செய்வேன்; ஒற்றைக் காலில் நின்று தவம் செய்வேன்; பஞ்சாக்கினி நடுவே தவம் செய்வேன்; ஆயிரமாயிரம் பிறப்புக்கள் எடுத்துத் தவம் செய்வேன்'' என்று அம்பிகை கூறினார்.'

அம்பாளுக்கு எவ்வளவு உறுதி பாருங்கள்! பிள்ளை வரம் வேண்டி விரதம் இருக்கும் ஒருவன் ஐந்து கிருத்திகைகளில் முருகன் கோயிலுக்குச் சென்று வேண்டுதல் நிறைவேறாவிடில் கோயிலுக்குச் செல்வதை நிறுத்திவிடுவான். அதற்கும் மேல் சுவாமியையே பழிக்கத் தொடங்குவான்! ஆனால் அம்பாளோ, தவத்தின் பலன் கிடைக்காவிடின், அது முறைப்படி நோன்பு காக்காத தம் தவறே எனக் கருதினார்!

'பெண்ணே! அது சரி, பரமேசுவரனை நோக்கித் தவம் செய்கிறாயே, என்ன வரம் கேட்கப் போகிறாய்?'' என்று அடுத்தபடியாகக் கேட்டார் அந்தணர்.

''திருமணம்'' என்று வெட்கத்துடன் கூறினார் அம்பிகை.

''பைத்தியக்காரப் பெண்'' என்று ஏளனமாகச் சிரித்தார் அந்தணர். 'பெண்ணே! திருமணம் புரிந்து கொள்வதற்கு நல்ல மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்தாய்.

ஆடை தோல்விடை ஏறுவ தணிகலம் அரவென்பு
கேடில் வெண்டலை மாலிகை கேழலின் மருப்பின்ன
ஒடுகொள்கலம் ஊண்பலி வெய்யநஞ்சுவப்புற்றோர்
காட தேநடம் புரியிடம் கண்ணுதற் கடவுட்கே.

சிவமூர்த்திக்கு உடை தோல்; வாகனம் மாடு; ஆபரணங்கள் பாம்பு, எலும்பு தலைமாலை, பன்றி கொம்பு, உண்கின்ற ஏனம் மண்டையோடு; உண்பது நஞ்சு; நடமாடுகின்ற இடம் மயானம்.

வேய்ந்து கொள்வது வெள்ளெருக் கறுகுநீர்
கொன்றை
பாந்தள் நொச்சியே மத்தமென் றினையன
பலவுண்டால்
சாந்தம் வெண்பொடி சூலமான் மழுத்துடி
தழலங்கை
ஏந்துகின்றது பாரிடம் சூழ்படை இறையோற்கே.

## உங்களுக்குத் தெரியுமா ?

**வருவதும் போவதும் இரண்டு**
**வந்தால் போகாதது இரண்டு**
**போனால் வராதது இரண்டு**
**கூடவே வருவது இரண்டு**

**இவை என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?**
**தெரியாவிட்டால் அடுத்த பக்கம் பாருங்கள்.**

சிவமூர்த்தி சூடிக்கொள்கின்றவை வெள்ளெருக்கு, அறுகம்புல், நதி, கொன்றைமலர், பாம்பு, நொச்சித்தழை, ஊமத்தமலர் முதலியன. பூசிக்கொள்வது சாம்பல், கரங்களில் தாங்கியிருப்பவை மழு உடுக்கை, நெருப்பு, அவருடைய சேனைகள் பூதகணங்கள் ஆகும்.

முறைபடுசுருதி யெல்லாம் மொழியினும்
அதுவேசார்வா
உறுகில ராகிப் பொல்லா ஒழுக்கமே கொண்டு
முக்கண்
இறைவனை இகழ்ந்து முத்தி எய்திடா துழல
முன்னாள்
மறையவர் பெற்ற சாபம் நின்னையும்
மயக்குறாதோ?

என்று பலபடியாக அடுக்கிக் கொண்டே போனார்.

சிவ அபசாரத்தைத் தாங்காமல்தான் தாட்சாயணி உடல் துறந்து பார்வதியாகப் பிறந்தார். இந்த மறுபிறவியிலும் சில நிந்தையையே கேட்க நேர்ந்த தேவி துடிதுடித்தார்.

''சுவாமி, ஏதோ வீபூதி பூசியிருக்கிறீர்கள். உருத்திராட்சம் அணிந்திருக்கிறீர்கள். வயதில் பெரியவராயிருக்கிறீர்கள், என மரியாதை செய்தேன். இனி உம்மிடம் பேசுவதும் பிழை. பொய்வேடம் பூண்டவரே! விரைவில் இங்கிருந்து போய்விடும்'' என்று பார்வதி ஆத்திரத்துடன் கூறினாள்.

அந்தக்கிழ அந்தணராபோவார்? முன்னிலும் கொடிய வார்த்தைகளைக் கூறினார் அவர். ''பெண் பாவாய்! நான் உன் மீது மையல் கொண்டு மறை விதிப்படி மணக்கவே வந்தேன். என்னை 'இங்கிருந்து போ' என்று சொல்லுவது முறையாகுமா?'' என்றார்.

பார்வதி இரு செவிகளையும் பொத்திக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். அவரைப் போகச் செய்ய முடியாது என்று கண்டபின், ''நீர் இங்கிருந்து போகாவிட்டால் நான் போகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே அவ்விடத்தை விட்டு எழுந்தாள்.

பார்வதியை அவர் விடவில்லை! எப்படி விடுவார்? விடுபவராயிருந்தால் தமது மோன நிலையை விடுத்துக் கைலாயத்திலிருந்து இவ்வளவு தொலைவு வந்திருப்பாரா? ஆம், முன்னைப் பழம் பொருட்கு முந்தைய சிவபெருமான்தான் அந்த முதியவர். 'வேதியா, வேதகீதா' என்று போற்றப்படும் சோதியன்தான் அந்த அந்தணர். வேதிய வடிவத்தை நீக்கினார். சிவகணங்கள் சூழ்ந்து துதிக்க ரிஷப வாகனத்தில் காட்சி கொடுத்தார்.

சிவபெருமானைக் கண்ட தேவியின் ஆனந்த அநுபவத்தை நாம் எப்படி வருணிக்க இயலும்? அன்புப் புயலில் அகப்பட்ட கொடியாக அவரது திருமேனி நடுங்கியது. நாணத்துடன் பலமுறை ஆண்டவனை வணங்கினார். '' எம்பெருமானே! தாங்கள் தாம் வந்து சோதித்தீர்களா? தேவரீரது மாயையை உணர முடியவில்லையே!'' என்று அதிசயித்துக் கூறினார். உலகையெல்லாம் மாயை வயப்படுத்தும் மகாதேவி ''சிவஅபவாதம் செய்யலாகாது என்று சொல்லிய நானே தங்களை நிந்தித்துப் பேசிவிட்டேனே?'' என்று உள்ளம் உருகிக் கூறினார்.

''அலகிலா உணர்வால் எட்டா வாதி நின் மாயை
தேறேன்
புலனிலாச் சிறியேன் நின்னை இகழ்ந்தவா
பொறுத்தி யென்றாள்''

''பார்வதி! நீ என்னிடம் சினந்து பேசியவற்றையெல்லாம் துதி என்றே கொண்டேன். உன்னைத் திருமணம் செய்து கொள்ள நாளை வருவேன். நீ இனியும் தவம் செய்ய வேண்டாம்'' என்று கூறிய சிவபெருமான் மறைந்துவிட்டார்.

பார்வதிக்குச் சிவபெருமான் காட்சியளித்ததைத் தோழிகள் சிலர் இமவானிடம் தெரிவித்தனர். இமவான் மிக்க மகிழ்ச்சி கொண்டு தன் மனைவி மேனையுடன் தவமகளின் தவச்சாலைக்குச் சென்று பார்வதியை அரண்மனைக்கு அழைத்து வந்தான்.

சாமானிய மானுடர்கள் இயற்கை வேகங்களை விலங்குபோல் வெறித்து திரிய விடாமல் தரும சாஸ்திரவழிப்படி கட்டுப்பாட்டில் அடக்கி வாழத் திருமண வாழ்வே உபாயம். அவ்வாறு மனிதர் செம்மையான வாழ்வு வாழவேண்டும் என்று காட்டவே எம்பெருமான் அன்னையைத் திருமணம் செய்து கொள்ளத் திருவுள்ளம் கொண்டார். மாணவனுக்குக் கற்றுத் தருவதற்காக ஆசிரியர் எழுத்துக்களைக் கூட்டி படிப்பதால் அவருக்கே படிக்கத் தெரியவில்லை எனலாமா? அதேபோல், நம் பொருட்டுதான் சிவபெருமான் பார்வதி தேவியை மணந்து காட்டினாரேயன்றி மையலும் பௌதிக உறவும் வேண்டியதல்ல. தேவியார் விநாயகனையோ, ஷண்முகனையோ கருத்தரித்துப் பெற்றார் என்று இதுவரை வரலாறு இல்லை. சிவபெருமான் என்றைக்கும் பிரம்மச்சாரி. எம்பிராட்டி என்றைக்கும் கன்னி. ஐயன் ஞானாகரன்; தேவி ஞானம்பாள்.

இப்படிப்பட்ட இருவரில் இன்று சிவபெருமான் மணமகன்; பார்வதி மணமகள், மணமகனின் உறவினர் போய்தானே பெண்பேச வேண்டும்? சிவபெருமான் சப்தரிசிகளை அந்த ஸ்தானத்தில் எண்ணினார். இதிலிருந்து அவர்களின் பெருமை தெரிகிறது. சப்தரிசிகள் இமயவெற்படைந்தனர்.

''அகிலாண்டகோடியீன்றும் கன்னியென மறைபேசும் மரகதவல்லியை மூவர்க்கும் முதல்வராகிய முக்கட்பரமர்க்கு மணம் செய்துகொடுத்து என்னையும் அடிமையாகத் தருவேன்'' என்று இமவான் அவர்களிடம் கூறினான்.

ஆனால்.. அவன் அருகில் நின்ற மேனையின் தாயுள்ளம் பார்வதியை சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று கிட்டி முட்டி வந்தபோது தயங்கியது. ''கல்யாணத்துக்குத் திடீரென்று ஒப்புக் கொள்ளக்கூடாது. அவசர

மில்லாமல் நிதானமாகத்தான் இந்த விஷயத்தில் முடிவு செய்ய வேண்டும்'' என்று இமவானிடம் கூறினாள்.

இமவான் காரணம் கேட்டபின் அவளால் கூறாது இருக்க முடியவில்லை.

''அவர் முன்பு தட்சன் மகளை மணந்தபின்பு ஆளைவிட்டு மாமனார் தலையை அறுத்துவிட்டார் என்று பேசிக்கொள்கிறார்களே!'' என்று இழுத்தாள். அவளது கற்பு அப்படிப் பேசிற்று.

ஏழு முனிவர்களும் மேனையை நோக்கி,''பரமேசன் கருணாமூர்த்தி. தட்சன் சிவநிந்தை செய்ததால் அவன் தலையை அறுத்தார். வழிபடுவோர்க்கு அறக் கருணையும் அல்லாதார்க்கு மறக் கருணையும் செய்பவர் அவர். பரமபக்தனான இமவானைப்பற்றி ஏன் கவலை?'' என்று ஆறுதல் கூறினார்கள்.

''தவசிரேஷ்டர்களே! உமா தேவியைத் திருமணம் செய்து கொள்ள விரைவில் வரும் வண்ணம் சிவமூர்த்தியிடம் தெரிவியுங்கள்'' என்று இமவான் கூறினான்.

ஏழு முனிவர்களும் திருமணத்துக்கு இமவான் இசைவு தந்ததைப் பெருமானிடம் தெரிவித்தபின் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

இமவான் தேவ தச்சனை வரவழைத்து ''நம் ராஜகுமாரி பார்வதியின் திருமணத்துக்காக நமது தலைநகரம் ஔஷதிப்ரஸ்தத்தை இந்திரலோகம் போல் அலங்கரிப்பாயாக'' என்று கட்டளையிட்டான்.

தேவதச்சன் இமயமலையின்மேல் பல கோபுரங்களையும் மன்றங்களையும் நிலைத்தேர்களையும், வீதிகள்தோறும் பூம்பந்தர்களையும் உண்டாக்கினான். வாழைகளும் கமுகுகளும் தோரணங்களும் நாட்டினான்.

பூந்தடாகம், பொற்சிகரம் முதலியவற்றை உண்டாக்கினான். ஒரு புறத்தே பதினாயிரம் யோசனைப் பரப்பில் ஒரு புரிசையை உண்டாக்கி அதன் நான்கு வாயில்களிலும் நான்கு கோபுரங்களை அமைத்தான். மையத்தில் செம்பொன்னாலாகிய திருமண மண்டபம் அமைத்தான். பார்வதியும் பரமேசுவரனும் எழுந்தருள்வதற்காக இந்திர நீலக் கற்களினால் ஒரு சிம்மாசனமும், மற்றோர் வீற்றிருக்க ஆசனங்களும் அமைத்தான்.

நகர் முழுவதும் கவினுற அலங்கரிக்கப்பட்டு நறுமணம் கமழும் மலர்கள் தூவப்பட்டன.

தேவர் கூட்டங்களும் முனிவர் கணங்களும் இமயமலையில் எள் விழ இடமின்றிக் கூடின; மேரு முதலிய மலைகளும், கடல்களும், நாகங்களும், திக்கு யானைகளும் பிறவும் வந்தன, இலக்குமி, சரஸ்வதி, இந்திராணி, முனிபத்தினிகள் துர்க்கை, காளி, சப்த நதிகள், அரம்பையர் முதலானோர் தேவிக்கு மணக்கோலம் செய்தனர்.

இமவான் தன் சுற்றத்தாருடன் திருக்கயிலாய மலை சென்று, நந்தி தேவர் அனுமதியுடன்உள்ளே சென்றான். சிவபெருமானை வணங்கி, 'எம் பெருமானே! அகிலாண்ட நாயகியைத் திருமணங் கொள்ளத் திருவுளம் கொண்டருளினீர்கள், சோதிட வல்லுநர்கள் மங்கல தினம் எனக்கூறிய பங்குனி உத்திரநாள் இன்றேயாகும். உமையைத் திருமணம் புரிய இன்றே என் நகருக்கு எழுந்தருள வேண்டும்' என்று வேண்டிக் கொண்டான். 'வரம்பில்லாத கணங்கள் சூழ நாம் இப்பொழுதே உன்னிடத்துக்கு எழுந்தருளுவோம். நீ முன்னே செல்வாயாக' என்று கூறிச் சிவபெருமான் இமவானை அனுப்பினார்.

'நம்முடைய திருமணக் கோலத்தைத் தரிசிக்கும் பொருட்டு உருத்திர கணங்களையும், திருமால், பிரமன் இந்திரன் முதலிய தேவர்களையும், ஏனையோரையும் இங்கே வரும்படிச் செய்வாய்'' என்று சிவபெருமான் நந்தி தேவரை நோக்கி பணித்தருளினார். நந்திதேவர் நினைத்த மாத்திரத்தில் காலாக்கினி, ருத்திரர், கூச்மாண்டேசர், ஆடகேசர், வீரபத்திரக் கடவுள், மகா சாத்தனார், ஏகாதச ருத்திரர்கள், உருத்திர கணங்கள், பவர் முதலிய அஷ்ட மூர்த்திகள் ஆதியோரும், குண்டோதரன், கண்டாகன்னன், பினாகி, பானுகம்பன், சங்குகன்னன் முதலிய சிவபூத கணத் தலைவர்களும், அவர்களுடைய பல்கோடி பூதங்களும், திருமால், பிரமன், திக்குப் பாலகர் முதலிய தேவர்களும், சூரியன் சந்திரன் முதலிய கிரகங்களும், நட்சத்திரங்களும், சப்த மாதர்களும், அஷ்டவசுக்களும், வித்தியாதரரும், முனிவர்களும் பிறரும் ஏழுகடல் திரண்டதென வந்து நின்றனர்.

பிரம்மதேவர், மணக்கோலத்துக்கேற்ற மணிமகுடம் முதலிய திவ்விய ஆபரணங்களை எம் பெருமான் முன்படைத்து வணங்கி நின்று, 'எந்தையே! தங்களுக்கு விருப்பும் வெறுப்பும் இல்லை. அடியேங்கள் உய்யும் பொருட்டே திருக்கல்யாணம் செய்து கொள்ள இசைந்தீர்கள். அதே போல் அடியேங்களின் விருப்பத்தை பூர்த்தி செய்யவே தங்கள் திருமேனியில் உள்ள பாம்பு, பன்றிக் கொம்பு, சிரமாலை, ஆமையோடு முதலியவைகளை நீக்கி, இந்த இரத்தினாபரணங்களை அணிந்தருளவேண்டும்'' என்று விண்ணப்பித்தார். பொன்னார் மேனிப் புரிசடைக் கடவுள் புன்முறுவல் கொண்டு திருமேனியில் உள்ள பாம்பு, எலும்பு முதலியன, இரத்தினாபரணங்களாகும் வண்ணம் திருவுளம் கொண்டார். இறைவன் எண்ணியவுடன் அவைகள் அவ்வாறாயின. [தொடரும்]

## விடை இது தான் !

1. வருவதும் போவதும் இரண்டு

செல்வம்; வறுமை

2. வந்தால் போகாதது இரண்டு

கல்வி, ஞானம்.

3. போனால் வராதது இரண்டு

மானம்; உயிர்

4. கூடவே வருவது இரண்டு

புண்ணியம்; பாவம்

—காந்தி பாகவதர் தொலைக்காட்சியில் ''தியாக தீபம்'' பேட்டியில் தெரிவித்தது.




—டாக்டர் த. அமிர்தலிங்கம்

வீமனும் துச்சாதனனும் இவ்வாறு சளைக்காமல் கதாயுத்தம் புரிய இறுதியில் அவர்களுடைய கதாயுதங்களே பிளவுபட்டு ஒடிந்துவிடுகின்றன. பிறகு இருவரும் வேறு ஆயுதங்கள் எதையும் எடுத்துக் கொள்ளாமல் தங்கள் தங்கள் கரங்களையே பயன்படுத்தி முட்டியுத்தம் புரிகிறார்கள். ஐந்து விரல்களையும் ஒன்றாகக் குவித்து, விரல் நகங்களால் மேனியைக் கிழித்து இருவரும் முட்டியுத்தம் புரிய, துச்சாதனன் எப்படித் துரோபதையின் கூந்தலைப் பற்றி இழுத்தானோ அப்படியே வீமனும் துச்சாதனனின் முடியைப் பற்றி இழுக்கிறான். துச்சாதனன் எப்படித் துரோபதையின் துகிலை உரிந்தானோ அப்படியே வீமனும் துச்சாதனனின் உடலில் எலும்புகள் மட்டுமே நிற்கச் சதைகளைத் தனியே பிய்த்து இழுக்கிறான். வீமனின் நகங்களே ஆயுதங்களாய் துச்சாதனன் மார்பைப் பிளக்க அவனுடைய குடலும் அறுபட்டு வயிற்றுக்கு வெளியே வந்து தொங்க, இரத்தமும் கங்கைபோல் பீறிட்டுப் பாய்கிறது.


அப்படிப் பீறிடும் இரத்தத்தில் அருவருப்பு சிறிதும் இல்லாமல், ஆகாயக் கங்கையில் நீராடினால் எப்படி மகிழ்ச்சி கொள்வானோ அப்படியே மகிழ்வுடன் நீராடுகிறான் வீமன். துச்சாதனன் மடிந்தான் என்பதும் அவன் இரத்தத்தில் வீமன் மகிழ்ந்து நீராடிக்கொண்டிருக்கிறான் என்பதும், குருச்சேத்திரக் களமெங்கும் வேகமாகப் பரவ, கிருஷ்ணார்ச்சுனர் உள்ளிட்ட எல்லோரும் திரண்டு வந்து இந்தக்காட்சியை வேடிக்கை பார்க்கிறார்கள். வீமன, துரோபதையின் கூந்தலைப் பற்றிய விரல்கள் இவைதானே என்று கேட்டு துச்சாதனனின் கைவிரல்கள் பத்தையும் அறுத்து எறிகின்றான். துச்சாதனன் அன்று அரசவையில் துரோபதைக்கு இழைத்த கொடுமையை எண்ணி எண்ணி ஆத்திரம் அடங்கிடாமல் கொதிக்கின்ற வீமன், துச்சாதனன் செந்நீரையும் தண்ணீராக நினைத்துப் பருக முற்பட பார்த்தசாரதி 'வேண்டாம்' எனக் கூறித் தடுத்துவிடுகிறார். வீமனும் கையில் ஏந்திய துச்சாதனன் செந்நீரைக் குடிக்காமல் தன் வாயில் விட்டு நன்குகொப்பளித்துக் கீழே உமிழ்ந்து தன் எண்ணம் நிறைவேறியதென்று மகிழ்ந்து கூத்தாடுகிறான்.

''குடியாமல் அக்குருதி கொப்பளித்து வாகை
முடியாநின்று என் எண்ணம் முற்றினன் என்று ஆங்கண்
படிஆரும் செங்கோன்மை பார்த்திவருக் கெல்லாம்
கொடிஆர் மடங்கல் எனக் கூத்தாடி
நின்றார்த்தான்''

(பதினேழாம் போர்ச்சருக்கம் 161)

வெற்றிக் களிப்பில் வீமன் இவ்வாறு கூத்தாட கௌரவர் சேனை நாலாபுறமும் சிதைந்து பறந்தோடுகிறது. இதைக் கண்டும், கர்ணன் தன் சேனையை ஒருங்கு திரட்டவோ, பாண்டவர்களுடன் ஆவேசமாகப் போரிடவோ முயலாமல் திக்பிரமை பிடித்தவன்போல் தன்தேரிலேயே திகைத்து நிற்க சல்லியன் கர்ணனைக் கடிந்து உரைக்கிறான். ''இதுபோன்ற நேரத்தில் அல்லவா தானைத் தளபதி மனங்கலங்கிடாமல் நின்றுபோர் செய்ய வேண்டும்'' என்று சல்லியன் இடித்துரைக்கக் கர்ணனும் ''என் ஆருயிர் நண்பன் துச்சாதனன் மறைவால் ஏற்பட்ட சோகம் இது. இனி பார், நான் கொதித்துப் போர் செய்து பாண்டவர்களைக் கொன்றொழிக்கிறேன்'' எனக்கூறித் தன் தேரை அர்ச்சுனனை நோக்கி திருப்புமாறு ஆணையிடுகிறான் கர்ணன்.

இதே நேரத்தில் கர்ணனின் மகன் விடசேடனும் நகுலனும் ஒருவரையொருவர் எதிர்த்து வீரப்போர் புரிந்து கொண்டிருக்கிறார்கள். புலிக்குப் பிறந்தது பூனையாகாதல்லவா! கர்ணனின் மகன் விடசேனன் நகுலனுடன் ஆற்றும் வீரப்போரைக் கண்டு அனைவருமே வியந்து நிற்கிறார்கள். நகுலனின் கணைகளை மாற்றுக்கணைகளால் அறுத்து நகுலன் ஏறிநிற்கும் தேர்களின் சக்கரங்களையும் விடசேனன் அழிக்க, சிதையும் தேரிலிருந்து தரைக்குத்தாவி நகுலனும் விடசேனனை எதிர்க்கிறான். விடசேனனின் தேர்க்கொடியை அறுத்து வீழ்த்தி, அவன் பிடித்திருக்கும் வில்லையும் நகுலன் அறுத்து வீழ்த்த நகுலனின் வீரத்தையும் வானவர்கள் பாராட்டுகின்றனர். ஆனாலும் விடசேனன் மற்றொரு வில்லைத் தாமதமின்றித் தன்தேரிலிருந்து எடுத்துக் கணைகளை ஏவ, நகுலன்மூர்ச்சையாகித் தரையில் சாய்ந்து விடுகிறான். வீமன் அங்கே விரைந்து வந்து நகுலனைத் தன்தேரில் ஏற்றிக்கொண்டு பறந்துவிட, விடசேனனால் வீழ்த்தப்பட்டிருக்க வேண்டிய நகுலன் தப்பி உயிர் பிழைத்துவிடுகிறான். விடசேனனின் வீரத்தைக் கண்ணுற்று வியக்கும் விசயன், தானே வலியவந்து, விடசேனனை எதிர்த்துப் போரிடுகின்றான்.



அர்ச்சுனனே தன்னை எதிர்த்துப் போரிட வரக்கண்டும் விடசேனன் அஞ்சிடாமல் ''நகுலனை ஓடவைத்ததுபோல் உன்னையும் ஓட வைக்கிறேன் பார்'' என்று வீரம் பேசி அம்புமழையைப்பொழிந்து அர்ச்சுனனின் அனுமக் கொடியையே கண்களுக்குத் தெரியாமல் மறைத்து விடுகிறான். அர்ச்சுனனும் கொதித்து சில கொடிய கணைகளை விட்டு, விடசேனனின் விரல்கள் அனைத்தையும் அறுத்தெறிந்து ஓர் அர்த்தசந்திரப் பாணத்தால் விடசேனனின் கிரீடம் தாங்கிய தலையையும் அறுத்துவிடுகிறான். அர்ச்சுனனோடு போர் புரிய அவனை நோக்கி வந்து கொண்டிருந்த கர்ணன் தன் கண்எதிரிலேயே தன் மகன் தலைவேறு உடல் வேறாகி சாயக்கண்டு மீண்டும் மயங்கித் தேரினில் சாய்ந்து விடுகிறான். சல்லியனும் தேரைத் தனிஇடத்திற்கு ஓட்டிச் சென்று கர்ணனை ஆசுவாசப்படுத்துகிறான்.

விடசேனனின் மரணமும், அதனால் கர்ணனின் சோகமும் காணும் அசுவத்தாமா, துரியோதனனைத் தேடிச் சென்று அவனுக்குச் சில அறிவுரைகளைக் கூறுகின்றான். ''துரியோதனா! துச்சாதனன் மடிந்த சிறிது நேரத்திற்குள் விடசேனனும் வீழ்ந்துவிட்டான். நம் அணியில்நமக்கு அரணாய் நின்று போரிட்ட வீடுமர் துரோணர் உள்ளிட்ட வீராதி வீரர்களை எல்லாம்கூட நாம் பறிகொடுத்து விட்டோம். இனிப் பாண்டவர்களை வெல்ல முடியும் என்று எனக்குக் கொஞ்சமும் நம்பிக்கை இல்லை. நீ எஞ்சியிருக்கும் உன் தம்பிகளோடு நீண்ட காலம் வாழ்ந்திருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். அதற்கு ஒரே வழி நீ தருமரோடு இந்தக் கடைசி நேரத்திலேனும் சமாதானமாகப் போக வேண்டும். அவர்களுக்குரிய நாட்டை நீ அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, உனக்குரிய நாட்டை நீ ஆட்சி செய்து சுகமுற வாழலாம். போரை நிறுத்திவிடு'' என்று அசுவத்தாமா துரியோதனனுக்கு அறிவுரை பகர்கிறான். ஆனால் மூர்க்கனும் முதலையும் கொண்டது விடமாட்டார்கள் அல்லவா! துரியோதனனும் ''பாண்டவர்க்கு அவர்கள் பங்கு இராச்சியத்தை நான் கொடுக்க வேண்டுமா? அது என் உயிர் இருக்கும் வரை நடக்காது'' என்று திட்டவட்டமாக மறுத்து ''அசுவத்தாமா! நீ போய் கர்ணனுக்கு ஆறுதல் சொல்லி அர்ச்சுனனைக் கொல்லுமாறு சொல்'' என்று துரியோதனன் அசுவத்தாமாவைத் திருப்பி அனுப்ப ''இவன் கேட்கமாட்டான்'' என்பதாக மனம் நொந்து அசுவத்தாமாவும் கர்ணனைக்கண்டு அவனுக்கு ''மனம் கலங்காதிரு கர்ணா!'' என்று தேறுதல் கூறுகிறான்.

''மலை கலங்கினும் மாதிரம் கலங்கினும்
மாதிரங்களில் விண்ணோர்
நிலை கலங்கினும் நெடுங்கடல் கலங்கினும் நிலம்
கலங்கினும் சேடன்
தலை கலங்கினும் பேரவை மூன்றிலும்
தளர்விலாதவர் கற்ற
கலை கலங்கினும் போர்முகத்தென் மனம்
கலங்குமோ கலங்காதே''.


என்று கர்ணனும் தன்மன உறுதியைக் கூறி ''என் மகன் விடசேனனின் தலையை அறுத்து வீழ்த்திய அர்ச்சுனன் தலையை நானும் அறுத்து வீழ்த்து கிறேன் பாருங்கள்'' என்று கூறி அர்ச்சுனனை எதிர்த்து வீரப்போர் புரியப் புறப்படுகிறான்.

கடந்த 16 நாட்களிலும் இவ்வளவு கடுமையாக கர்ணனும் அர்ச்சுனனும் போர் செய்யவில்லை என்று பார்ப்பவர்கள் எல்லாம் கூறுமாறு கர்ணார்ச்சுனர்கள் மிகக் கடுமையாகப் போர்புரிகிறார்கள். ''உலகம் அழியும் ஊழிக்காலம் வந்துற்றது போலும்'' என்று எண்ணி அஞ்சியவர்களாய், அதே நேரத்தில் கர்ணார்ச்சுனர்களின் போரைக்காணும் ஆர்வமும் மிகக் கொண்டவர்களாய் தேவர்கள் எல்லாம் கூட வந்து வானில் கூடி நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். கர்ணனும் அர்ச்சுனனும் ஏவும் கணைகள் ஒன்றோடொன்று முட்டி, நுனியோடு நுனி பொருந்தி ஒன்றினை ஒன்று விஞ்ச முடியாமல் பயனின்றிப் போய்விடுகின்றன. இன்னும் சில கணைகள் ஒன்றினை மற்றொன்று சிதைக்க இரண்டு கணைகளுமே பயனின்றிச் சிதைந்து போய்விடுகின்றன.

காண்டீபத்திலிருந்து புறப்படும் தன் வலிய கணைகளும் கர்ணனுடைய கணைகளை வெல்ல முடியாமல் பயனின்றி அழிவதைக் காணும் அர்ச்சுனன், அக்கினி தேவன் தனக்கு அளித்த தேவதத்தம் எனும் சங்கினை முழக்கிக் கர்ணனின்தேர் நகராவண்ணம் தன் அம்புகளினாலேயே ஒரு சரகூடத்தை உண்டாக்குகிறான். தன்தேரை நகரவிடாமல் அர்ச்சுனன் சரகூடம் அமைத்துவிடக் கர்ணனும், அர்ச்சுனனின் தேரை நகரவிடாமல் தானும் மறுசரகூடத்தை உண்டாக்குகிறான். இதனால் இருவருமே அவரவர் நின்ற இடத்தில் நின்றபடி சற்றுநேரம் கணைகள் ஒன்றும் ஏவாமல் செயலற்று நிற்கிறார்கள். கர்ணன் அமைத்த சரகூடத்தைப் பிளக்க அர்ச்சுனன் முயலும்போது அவனுக்கு எதிரில் நிற்கும் கர்ணனோ தர்மபுத்திரன்போல் காட்சியளிக்க, அர்ச்சுனனால் கணைகள் ஒன்றும் ஏவ முடிவதில்லை. ''கண்ணா! என் எதிரே இப்போது நின்று போர் செய்து கொண்டிருப்பது கர்ணனா? அல்லது தருமரா? எனக்கு ஒரே மயக்கமாக இருக்கிறதே'' என்று அர்ச்சுனன் வினவ அங்கிருந்து தேரைத் திருப்பி விடுகிறார் பார்த்தசாரதி.

இதே நேரம் உண்மையான தருமரும் அர்ச்சுனனைத் தேடி வருகிறார். ''என்ன கண்ணா? இன்றைக்குள் கர்ணன் மடிவான் என்று சொன்னாயே! கர்ணன் மடிந்தானா?'' என்று ஆர்வமுடன் அவர் வினவ, கண்ணபெருமானும் 'இல்லை' என்று தலையசைக்க அதனால் கோபம் கொள்ளும் தருமர் ''அர்ச்சுனா! என்ன காண்டீபம் உன் காண்டீபம்? அதன் வலிமை குறைந்து போனதா என்ன?'' என்று கேட்டுவிடுகிறார். அவ்வளவுதான் அர்ச்சுனனுக்குப் பொங்கி வருகிறதுஆத்திரம். தன் பாசத்திற்குரிய அண்ணா என்றும் பாராமல் அர்ச்சுனன் சீறி, ''என் காண்டீபத்தைப் பழித்த உன் தலையை அறுத்துவிடுகிறேன்'' என்றுவில்லையும் வளைக்க பார்த்தசாரதி, ''அர்ச்சுனா! என்ன இது?'' என்று அவனைத் தழுவிச் சமாதானப் படுத்துகிறார். அர்ச்சுனன் தன் வில்லைப் பழிப்பவர் யாராயினும் அவரைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று சபதம் செய்திருக்கிறான். ஆகவேதான் ''என்ன காண்டீபம்?'' எனத்தருமர் அர்ச்சுனனின் வில்லைக் குறைத்துக் கூறிவிடவே தானும் கொதித்து தர்மரின் தலையையே அறுப்பதாக ஆத்திரப்படுகிறான்.

அர்ச்சுனனைத் தருமருக்கெதிராகக் கணை ஒன்றும் தொடுக்காமல் தடுத்துவிடும் கண்ணபெருமான் ''அர்ச்சுனா! பெரியோர்களைப் பழித்து நிந்தையாகச் சில சொற்களைக் கூறுவதும்கூட அவர்களுடைய தலையறுப்பதற்குச் சமமே. நீயோ தருமரை ஏகவசனத்தில் பேசி 'தலை அறுக்கிறேன்' என்றும் வசை கூறிவிட்டாய். இதுவே அவருடைய தலையை நீ அறுத்ததற்குச் சமமே. ஆகவே இனி நீ சாந்தம் கொள்'' என்று சமாதானப் படுத்த அர்ச்சுனனும் சாந்தம் கொள்கிறான். ஆனால் தருமரோ மனம் மிக நொந்தவராய் தம் தேரிலிருந்து கீழே இறங்கி ''நான் கானகம் போகிறேன். இனி எனக்கு இந்த இராச்சியமும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம். நீங்களே வென்று ஆண்டு கொள்ளுங்கள்'' என்று விடுவிடுவெனத் தேரிலிருந்து இறங்கி நடக்கத் தொடங்கி விடுகிறார். அர்ச்சுனனும் ஆத்திரத்தில் தருமரின் மனம் மிகப் புண்படும்படியாகப் பேசித்தான் நடந்து கொண்டதற்கு உண்மையில் மிக வருந்தித் தருமரின் கால்களில் விழுந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டுகிறான். பார்த்தசாரதியும் தருமரைச் சாந்தப்படுத்தி ''அர்ச்சுனனை மன்னித்துவிடு. இனி அவன் கர்ணனைக் கொல்லாமல் திரும்பமாட்டான்'' என்று ஆறுதல் மொழிகளைக் கூறி தருமரை அவருடைய தேரில் ஏற்றுகிறார். பொறுமையின் வடிவமான தருமரும் ஒரு நொடிநேரம்பொறுமை மாறி ஆத்திரப்பட்டுவிட, அந்த ஆத்திரத்திற்குப்




அம்மையும் அப்பனும் ஆண்டுதோறும் பங்குனி உத்திரத் திருநாளன்று திருமணம் கொள்வதாய் மரபு உண்டு. ஒவ்வோராண்டும் பங்குனி உத்திரத் திருவிழாவிற்குப் பின்னர் காளையரும் கன்னியரும் மணம் புணர்ந்து உலக வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கவேண்டும் என்பதை எடுத்துக் காட்டவே இவ்விழா ஏற்பட்டதாகும்.

—சோமலே

பரிசாகத் தன் தம்பியிடமே வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டிய சிறுமைக்கு ஆளாவதை இச் சம்பவம் நமக்கு உணர்த்துகிறது. இவ்வாறு அறியாமல் நிகழ்ந்துவிடக்கூடிய தவறுகளை 'மறப்போம், மன்னிப்போம்' என ஏற்று மன்னித்துவிடுவதே மகத்தான மனித தருமம் ஆகும். அப்படித்தான் தருமரும் அர்ச்சுனனும் நிகழ்ந்ததை மறந்து ஒருவரை ஒருவர் மன்னித்து, நிகழவேண்டிய காரியத்தில் ஊக்கம் கொள்ள, எல்லாம் வல்ல எம்பெருமானாகிய கண்ணபெருமான் அவ்விருவரையும் சமாதானப்படுத்தி ஆற்றுப்படுத்துவதையும் இச்சம்பவத்தில் காண்கிறோம்.

தருமர்மேல் மிக்கபாசமும் பக்தியும்கொண்டவன் அர்ச்சுனன். அத்தகைய பாசம் அவனுக்கு இருப்பதனாலேயே கர்ணனும்கூட தருமராக அர்ச்சுனனுக்குத் தோன்றினான். அர்ச்சுனன் தர்மர் மேல் கொண்ட பாசம் கர்ணனுடன் அவன் ஆற்ற வேண்டிய கடுமையான போருக்குத் தடையாக அமைகிறது. ஆகவே தருமரைச் சிறிது நேரம் அர்ச்சுனன் வெறுக்கும்படியாக இத்தகைய ஒரு சம்பவத்தை உண்டாக்கினால்தான் அர்ச்சுனன் கண்ணுக்குக் கர்ணன் தர்மராகத் தோன்றமாட்டான் என்று எண்ணி பார்த்தசாரதியான கண்ண பெருமான் பொறுமையின் வடிவமான தருமரை அர்ச்சுனனின் காண்டீபத்தைப் பழிக்கச் செய்து இப்படி ஒரு நாடகத்தை ஆடி இருப்பாரோஎன்றும் கூட நமக்கு எண்ணத்தோன்றுகிறது. காண்டீபத்தைப் பழித்த தருமரை அர்ச்சுனன் மன்னித்து மறந்துவிட்டாலும்கூட, ''என்ன உன் காண்டீபம்?'' என்று அவர் கூறிய அந்த ஏளனச் சொல் அர்ச்சுனனுக்கு மிக்க ஆத்திரத்தை தூண்டிக் கொண்டிருக்கும்படியால் அவன் கர்ணனுடன் மீண்டும் போரிடும் போது மிகுந்த ஆவேசத்தைக் காட்டுகிறான். சரகூடத்தை அறுத்துத்தள்ளிக் கர்ணனுடன் வீமன் அப்பொழுது உக்கிரமாகப் போரிட்டுக் கொண்டிருக்க ''வீமா! இனி நான் கர்ணனைப்பார்த்துக் கொள்கிறேன். நீ போ'' என்று கூறி அர்ச்சுனன் வீமனை விலக்கித்தான் கர்ணனுடன் போரிடுகிறான்.

அர்ச்சுனன் அக்கினியாஸ்திரத்தை ஏவ, பெருத்த இடியோசையுடன் அனலினைப்பொழிந்து கொண்டு எதிர் நிற்கும் கௌரவர் சேனைகளை எல்லாம் நீறுபடுத்திக்கொண்டு கர்ணனை நோக்கிப் பாய்கிறது அக்கினியாஸ்திரம். கர்ணன் அக்கினியாஸ்திரத்திற்கு மாற்றாக வருணாஸ்திரத்தை ஏவுகிறான். ஏழு மேகங்களும் சேர்ந்து பெருமழையைப் பொழிவதைப் போல் நீரைப்பொழிந்து கொண்டு சென்ற அவ்வருணாஸ்திரம் அக்கினியாஸ்திரத்தைத் தணியச் செய்துவிடுகிறது. அர்ச்சுனன் அடுத்து வாயுவாஸ்திரத்தை ஏவ, கர்ணனும் அதற்கு மாற்றாக சர்ப்பாஸ்திரத்தை ஏவுகிறான். காற்றினை உணவாக உண்டு வாழ்வது சர்ப்பம். ஆகவே கர்ணன் சர்ப்பாஸ்திரத்தை ஏவ, அர்ச்சுனனின் வாயுவாஸ்திரத்தால் உண்டான பேரூழிக் காற்றினை எல்லாம் சர்ப்பாஸ்திரம் உண்டுதணித்துவிடுகிறது. அர்ச்சுனன் அந்தகாராஸ்திரத்தை ஏவ, குருசேத்திரக்களம் முழுதும் எங்கும் இருளாகக் காட்சி அளிக்கிறது. உடனே கர்ணன் பூர்ண சந்திராஸ்திரத்தைச் செலுத்த, இருள்முற்றும் நீங்கிப் பேரொளி உண்டாகிறது. இந்திரன்தனக்கு அளித்த இந்திராஸ்திரத்தை அர்ச்சுனன் செலுத்த கர்ணனும் சூரியன் தனக்கு அளித்த சூரியாஸ்திரத்தைச் செலுத்துகிறான். இந்திராஸ்திரமும் சூரியாஸ்திரமும் சமவல்லமை வாய்ந்தவை ஆதலால் ஒன்றோடு மற்றொன்று முட்டி ஒன்றை ஒன்று வெல்ல முடியாமல் இரண்டு அஸ்திரங்களும் தம்தம் முனை முறிந்து பயனின்றிப் போகின்றன. அர்ச்சுனன் ''கர்ணா! இதோ பிரம்மாஸ்திரம். முடிந்தால் தடுத்துக் கொள்'' என்று பிரம்மாஸ்திரத்தை ஏவுகிறான். கர்ணனும் ருத்திராஸ்திரத்தை ஏவிப் பிரம்மாஸ்திரத்தைத் தடுத்துவிடுகிறான். தங்கள் அஸ்திரங்கள் அனைத்தும் இவ்வாறு வெற்றி தோல்வியின்றி வீணாகிப் போவதைக் காணும் கர்ணார்ச்சுனர்கள், இனி எந்த அஸ்திரத்தைத் தொடுப்பது என்று தெரியாமல் அயர்ச்சியால் மயங்கி நிற்க, கர்ணன் அர்ச்சுனனைக் கொல்லும் பொருட்டு தான் போற்றி வைத்திருக்கும் நாகாஸ்திரத்தை எடுக்கிறான்.

''நாகாஸ்திரத்தை வெற்றி கொள்ள அர்ச்சுனனால் முடியாது. இன்று அர்ச்சுனன் மடிவது திண்ணம்'' என்று வானவர்களும் அஞ்சியவராய் ஒதுங்கி நின்று போரைக் கருத்தூன்றிக் காண்கிறார்கள். தன்மகன் விடசேனன் தலையை அர்ச்சுனன் அறுத்து வீழ்த்தியதைப் போலவே கர்ணனும் அர்ச்சுனன் தலையை அறுத்து வீழ்த்தஆசை கொண்டு நாகாஸ்திரத்தைக் கர்ணனின் கழுத்திற்கு நேராகக் குறி வைக்கிறான். அப்பொழுது சல்லியன் ''கர்ணா! அர்ச்சுனன் கழுத்துக்குக் குறி வைக்காதே! மார்புக்குக் குறிவை'' என்று கூற, கர்ணனோ அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் அர்ச்சுனன் கழுத்தையே குறிவைத்துநாகாஸ்திரத்தை ஏவுகிறான். காண்டவ வனதகனத்தின் போது தன் குடும்பத்தையே பலிகொண்ட அர்ச்சுனனைப் பலி கொள்ளும் ஆவலுடன் நாகாஸ்திரமும் நெருப்புப் பொறிகளைக் கக்கிக்கொண்டு சீறிப் பாய்கிறது. அர்ச்சுனனின் கழுத்தினை நோக்கிச் சீறிப்பாய்ந்து வந்த நாகாஸ்திரத்திலிருந்து அர்ச்சுனனின் உயிரைக் காக்க, தக்க தருணம் பார்த்து பார்த்தசாரதி ஒரு உபாயம் செய்கிறார். பன்னிரண்டு அங்குல ஆழம் மண்ணிற்குள் இறங்கி நிற்குமாறு பார்த்தசாரதி தம் தேரை அழுத்த தேரும் சடாரென மண்ணிற்குள் இறங்கி நிற்கின்றது. இதனால் அர்ச்சுனனின் கழுத்து இருந்திருக்க வேண்டிய இடத்தில் தலையின் கிரீடம் வந்து நிற்க நாகாஸ்திரமும் அர்ச்சுனனின் அந்தக் கிரீடத்தை மட்டுமே தாக்கிக் கீழே தள்ளிவிட்டு பறக்கின்றது! அர்ச்சுனனின் தலைக்கு வந்த ஆபத்தை தலைக் கிரீடத்திற்கு வந்த ஆபத்தாக்கி அர்ச்சுனன் உயிரைத் தக்க உபாயம் செய்து காப்பாற்றி விடுகிறார் நம் பார்த்தசாரதி. கண்ணபெருமான் அர்ச்சுனனைக் காக்க செய்த இந்தத் தந்திர உபாயத்தைப் போற்றி மலர்மாரி

## பொன்மொழி

**சாதிகள் இல்லையடி பாப்பா—குலம்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்**

—மகாகவி பாரதியார்

பொழிந்து அவரைப் போற்றிக் கொண்டாடுகிறார்கள் தேவர்கள்.


நாகாஸ்திரம் தன் தலைக் கிரீடத்தைத் தட்டிச்சென்ற ஒரு நொடி நேரம் அர்ச்சுனன் தடுமாறி நின்றாலும் தன் முகத்தைத் திருப்பாமலே அவன் ஒரு மாற்றுக் கணையை ஏவி, நாகாஸ்திரத்தை இரண்டு துண்டுகளாக்கி விடுகிறான். தலைக்கிரீடத்தைத் தட்டித் தலைக்குப் பின் பறந்த நாகாஸ்திரத்தைத் தலையைத் திருப்பாமலே இவ்வாறு அர்ச்சுனன் இரண்டு துண்டுகளாக்கிவிடுவதை போற்றும் வில்லிப்புத்தூரார் ''அர்ச்சுனனுக்கு பிடரியிலும் கூடவா கண்கள் இருக்கின்றன?'' என்று கூறி வியக்கிறார். அர்ச்சுனன் கணையால் இரண்டு துண்டான போதும் நாகாஸ்திரம் கர்ணனிடம் பறந்து வந்து தன்னை மீண்டும் அர்ச்சுனன் மேல் ஏவுமாறு வேண்ட, கர்ணனோதான் குந்திக்குச் செய்து கொடுத்த சத்தியத்தை நினைவு கூர்ந்தவனாய் ''இரண்டாவது முறையாக உன்னை ஏவ மாட்டேன்'' என்று மறுத்து விடுகிறான். நாகாஸ்திரமும் கர்ணனை நொந்தவாறு சிதைந்துஅழிந்து உயிர்விடுகிறது. இதே நேரத்தில் கர்ணனின் தேர்ச்சக்கரங்களும் மண்ணில் புதைந்து நின்றுவிட, தேரிலிருந்து இறங்கிக் கொள்ளும் சல்லியனும் கர்ணனை வைகிறான். ''கர்ணா! நான் கூறியபடி அர்ச்சுனன் மார்பிற்கு நீ குறி வைத்திருந்தால் அர்ச்சுனன் உயிர் பிழைத்திருக்கவே முடியாது. இவன் என்ன சொல்வது, நாம் என்ன கேட்பது என்ற அகம்பாவம் கொண்ட உன்னால் இனி பாண்டவர்களை வெற்றி கொள்ளவும் முடியாது. நான் உனக்கு இனி தேர் செலுத்தவும் மாட்டேன் போ'' என்று கூறிக் கர்ணனைக் கோபித்தவனாய் சல்லியனும் தனியே விட்டுப் போய் விடுகிறான். ''பட்ட காலிலே படும் கெட்டு குடியே கெடும்'' என்பதற்கேற்ப நாகாஸ்திரம் பயனின்றிப்போக, தேர்ச்சக்கரங்களும் நிலத்தில் புதைந்து விட, சல்லியனும் தன்னை நிராதரவாய் விட்டுப் போய்விட, கற்ற வித்தைகள் எல்லாமும்கூட தன் நினைவிற்கு வராமல் மயங்கி நிற்கிற கர்ணன் ''எல்லாம் பரசுராமனின் சாபமே'' என நினைத்து வருந்துகிறான்.

பரசுராமரின் தந்தை ஜமதக்னி முனிவர், இவரைக்கார்த்தவீரியார்ச்சுனன் என்ற சத்திரியன் கொன்றுவிடவே பரசுராமரும் கார்த்தவீரியார்ச்சுனனைக் கொன்று பழி தீர்த்துக் கொள்வதோடு சத்திரியர் அனைவர் மீதும் வெறுப்பு கொண்டு சத்திரியர் எவருக்கும் வித்தை கற்றுத்தரமாட்டேன் என்ற ஒரு வைராக்கியமும் அவர் கொண்டிருந்தார். அப்படிப்பட்ட பரசுராமரிடத்தில் கர்ணன் சத்திரியனான அதிரதன் என்னும் தேர்ப்பாகன் வளர்த்த மகன் தான் என்பதை மறைத்து வித்தைகளைக் கற்றுக் கொண்டான். கர்ணன் சத்திரியனே என்பதைப் பரசுராமருக்குக் காட்டிக் கொடுக்க நினைத்தார் கண்ண பெருமான். கர்ணனின் மடி மீது தலை வைத்துப் பரசுராமர் உறங்கிக் கொண்டிருந்த ஒரு வேளையில் கண்ண பெருமான் ஒரு வண்டின் வடிவெடுத்துக் கர்ணனின்தொடையைத் துளைத்துப் புண்ணாக்கிவிட, தொடையில் பீறிட்ட இரத்தம் பரசுராமரின் மேனியையும் ஈரமாக்கி அவர் உறக்கத்தைக் கலைத்துவிட்டது. கண் திறந்து பார்த்த பரசுராமர் கர்ணன் தன் தொடையிலிருந்து இரத்தம் பீறிடவும் மனம் கலங்கிடாமலும் தன்னைத் துயிலெழுப்பாமலும் இருந்ததைக் கொண்டு கர்ணன் ஒரு சத்திரியனே என்பதைத் தெரிந்து கொண்டார். சத்திரியன் என்பதை மறைத்துத் தன்னிடம் கர்ணன் கற்றுக் கொண்ட வித்தைகள் ''தக்க சமயத்தில் உதவாமல் போய் விடும்'' என்று பரசுராமர் அன்றைக்குக் கர்ணனுக்குச் சாபம் கொடுத்தார். அவர் அன்று கொடுத்த சாபமே இன்று பலித்து கற்ற வித்தைகள் ஒன்றும் தன் நினைவில் வராமல் மயக்கத்தை உண்டாக்குவதைக் கர்ணன் தெரிந்து கொள்கிறான்.

மண்ணில் புதையுண்டு போன தன் தேரை விட்டு வேறொரு தேரில் ஏறி கர்ணன் அர்ச்சுனனோடு போரிட்டாலும் அவனால் முன்போல் அர்ச்சுனனுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. 'அர்ச்சுனா! கர்ணன் தான் பெற்ற சாபங்களால் வலிமை குறைந்து நிற்கிறான். இதுவே நல்ல தருணம். வலிமைமிக்க கணைகளால் அவன் மேனியைத் துளைத்திடு'' என்று பார்த்தசாரதியும் அர்ச்சுனனுக்குச் சொல்லிக் கொடுக்க, அர்ச்சுனனும் அவ்வாறே கர்ணனின் மேனிமுழுவதும் அம்புகளால் துளைக்க, அவன் மேனியிலிருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்கிறது. தான் ஏறியிருக்கும் தேரிலிருந்து கர்ணன் தரைக்கு உருண்டபோதும் வில்லினை விடாமல் பிடித்து நின்நின்றன அவன் கைகள். கர்ணன் ஏவாமலே அவன் செய்ததருமமே அவனுக்காக மாற்றுக் கணைகளை இடைவிடாது அர்ச்சுனனை நோக்கி ஏவும் அற்புதமும் அங்கே நிகழக்கண்டு தேவர்கள் வியக்கிறார்கள். அப்பொழுதுதான் பார்த்தசாரதி ''பொறு அர்ச்சுனா பொறு! தருமம் தலைகாக்கும் என்பது எத்தகைய மெய்யான பொன்மொழி என்பதைத்தான் இப்பொழுது நீ கண்டு கொண்டிருக்கிறாய். நீ ஏவும் கணைகளுக்குக் கர்ணன் ஏவிடாமலே மாற்றுக் கணைகள் வருவதைப் பார். அவன் செய்த தருமமே கவசமாய் நின்று அவனைக் காத்து நிற்கிறது. சிறிது நேரம் நீ அம்புகளை ஏவாமல் இங்கிரு. நான் வருகிறேன்'' என்று கூறிக் கண்ண பெருமான் ஒரு மறையவராய் வேடம் தாங்கிக் கர்ணன் சாய்ந்திருக்கும் இடத்திற்கு வருகிறார்.

அங்கமெல்லாம் அம்புகள் துளைத்திருக்க மயங்கிச் சாய்ந்திருக்கும் கர்ணனை நெருங்கிவரும் மறையவர், ''சூரிய குமாரனே! நான் இதுகாறும் மேருமலையில் தவம் செய்து கொண்டிருந்தேன். நலிந்தவர்களுக்கு நீ வேண்டியதெல்லாம்வேண்டியவாறே கொடுக்கிறாய் என்பதைக் கேள்விப்பட்டு நானும் உன்னிடம் யாசகம் பெற வந்தேன். நான் வேண்டியதை நீ எனக்குக் கொடுக்க வேண்டும்'' என்று கூறி மயங்கியிருக்கும் கர்ணனை எழுப்புகிறார். கர்ணனும் மறையவரின் வார்த்தைகளைக் கேட்டு தன்னிரு காதுகளிலும் அமுதம் பாய்வதைப் போல் மனம் மகிழ்ந்து முகம் மலர்ந்து, ''உமக்கு என்ன வேண்டுமோ அதைக் கேளும்'' என்று கூற மறையவராய் நிற்கும் மாயக்கண்ணனும் ''நின் புண்ணியம் அனைத்தும் எனக்கு உதவ வேண்டும்'' என்று கேட்டதும் கர்ணன் மேலும் மகிழ்ச்சி கொண்டு முகம் பூரிக்கின்றான். ''நானோ என் உயிர் உடலுக்குள்ளே நிற்கிறதா, அல்லது வெளியேறிப் போய்விட்டதா என்றும் தெரியாத நிலையில் இக்களத்தில் இருக்கிறேன். வேண்டியவர்க்கு வேண்டியதை எல்லாம் கொடுக்கும் நிலையில்நான் இப்பொழுது இல்லையே! என்னிடம் நீர் என்ன கேட்பீரோ? அதைக் கொடுக்க முடியாமல் போய் விடுமோ? என்று கலங்கினேன். நான் மனம் மகிழ என்னிடம் உள்ளதையே-என் புண்ணியத்தையே நீர் கேட்டதனால், இல்லை என்று கூறும் அவச்சொல்லுக்கு ஆளாகாமல் என்னை வாழ வைத்தீர். நான் செய்த புண்ணியம் அனைத்தும் தருகிறேன். பிரம தேவனையும் மிஞ்சியபுண்ணியர் ஆகிய உமக்கு நான் உதவும் புண்ணியமோபெரிது'' என்று சாகும் தருவாயிலும் கூட மனம் மகிழப் பேசி முகமும் அகமும் மலர்ந்து கர்ணன் ஈத்துவக்

# திருத்தணிகையில் தமிழ்ப் புத்தாண்டு 1008 பால்குட விழா



''பாகுகனி மொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளன்'' முருகன். அவன் முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன். அத்துணை ஆழமான காதல் தமிழ் மொழி மேல் முருகனுக்கு உண்டு. எனவே தான் தமிழ்க் கடவுள் என பக்தர்கள் முருகனை அழைக்கிறார்கள்.

அத்தகைய தமிழ் மொழி பேசும் தமிழர்களின் புத்தாண்டில் வள்ளல் முருகனைக் கண்டு வணங்கும் விழாவை, முதன் முறையாக ரௌத்திர ஆண்டு (1980 ஏப்ரல்) 108 பால்குட அபிஷேக விழாவாக ஏற்படுத்தி மயிலை மாமுனிவர் சித்தர் தவத்திரு குருஜி சுந்தரராம் சுவாமிகள் தலைமை ஏற்று துவக்கி வைத்தார்கள். அன்றுமுதல் ஆண்டு தோறும் சித்திரை முதல் தேதி பால்குட விழா ஊர்வலம் ஆறுமுகசுவாமி கோயிலில் ஆரம்பித்து, மலைக்கோவில் சென்று அபிஷேகக் காட்சியை ஆயிரக்கணக்கான பக்தர்கள் கண்டு களிக்கிறார்கள். நாளடைவில் 108 பால்குடவிழா 1008 பால்குட விழாவாக விரிவு பெற்றுச் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது.

இந்த விழா தொடர்ந்து நடக்க, பக்தர்களிடம் ஒரே தடவையில் 101 ரூபாய் ஒவ்வொருவரிடமிருந்து பெற்று அதனைச் சேமநிதியிலிட்டு அதன் வட்டி வருமானத்தைக்கொண்டு ஆண்டு தோறும் நடக்கிறது.

வரும் 13-4-88 அன்று 'விபவ' தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பதை ஒட்டி 1008 பால்குட விழா திருத்தணிகையில் மிகச் சிறப்புடன் கொண்டாடப் பட இருக்கிறது. இவ்விழாவில் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு அருள்மிகு திருத்தணி முருகன் திருவருளைப் பெறலாம்.

---

கும் இன்பமே இன்பமாக உவந்தான் என்றால் அவனுடைய கொடை உள்ளத்தை என்ன வென்று போற்றுவது?


''ஆவியோ நிலையிற் கலங்கியது யாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவம் தன்னில் வந்திலையால்
ஓவிலாது யான் செய் புண்ணியம் அனைத்தும்
உதவினேன் கொள்க நீயுனக்குப்
பூவில்வாழயனும் நிகரிலன் என்றால் புண்ணியம்
இதனினும் பெரிதோ''
(பதினேழாம் போர்ச்சருக்கம் 240)

என்று கர்ணன் கூறக்கேட்டு மறையவராம் பார்த்தசாரதியும் மனம் மகிழ்ந்து நெகிழ்ந்து கர்ணனை நோக்கித் தம் இருகரங்களை நீட்ட, கர்ணனும் தன் மேனியில் பீறிடும் இரத்தத்தினாலேயே தாரை வார்த்துத் தன் புண்ணியம் அனைத்தையும் மறையவருக்குக் கொடுக்கிறான்.

கர்ணன் அளித்த புண்ணியங்களை எல்லாம் மறையவராய்ப் பெற்றுக் கொண்ட பார்த்தசாரதி, கர்ணன் காணச் சங்கு, சக்கரம், கதை, வாள், வில் ஆகிய பஞ்சாயுதங்களையும் தாங்கிய தம் மெய்யான நாராயண சொரூபத்தைக் கர்ணனுக்குக் காட்டுகிறார். 'கர்ணா! கவச குண்டலங்களை இந்திரன் மூலமாய் உன்னிடம் கவர்ந்ததும், நாகாஸ்திரத்தை அர்ச்சுனன் மேல் ஒருமுறைக்கு மேல் ஏவக் கூடாது என்று குந்தியின் மூலமாய் உன்னிடம் பெற்றதும் எல்லாம் நானேதான். உனக்கு என்ன வரம் வேண்டுமோ அதைக்கேள். தருகிறேன்'' என்று கூறுகிறார். ''நாராயணமூர்த்தியாகிய தங்களைக் காணப்பெற்ற பாக்கியசாலியான எனக்கு வேறென்ன வேண்டும். இருந்தாலும் ஒரு வரம் கேட்கிறேன். நான் இனிப் பிறக்க நேர்ந்தால் பிறவிகள்தோறும் இரப்பவர்க்குஇல்லை என்று உரையா இதயம் நீ அளித்தருள்'' என்று கர்ணன் வேண்ட, ''அப்படியே தருகிறேன்கர்ணா! நீ எத்தனைப் பிறவி எடுத்தாலும் தானம் செய்தலையும் செல்வத்தையும் பெறுவாய். அப்பிறப்புகளின் முடிவிலே முத்தியும் நீ பெறுவாய்'' என்று அருள்புரிகிறார் நாராயணமூர்த்தி. பின் கர்ணனிடம் விடைபெற்று பார்த்தசாரதியாகத் தம் கோலத்தை மாற்றி அர்ச்சுனனை வந்தடைகிறார். ''அர்ச்சுனா! இப்பொழுது நீ கர்ணனைக்கொல்'' என்று அவர் கூற, அர்ச்சுனனும் தன் காண்டீபத்தை வளைத்துக் கர்ணன் மார்பினை நோக்கி கணை தொடுக்க தர்மத்தின் தலைவனான கர்ணனும் தான் பார்த்தசாரதிக்கு வழங்கிய தருமம் காரணமாகவே உயிரினை விடுகிறான். அப்பொழுது 'கர்ணன் சாய்ந்தான்' என்ற அசரீரீ ஒலிக்க, அது கேட்கும் குந்தி 'மகனே கர்ணா! மாண்டுவிட்டாயா'' என்று கோ என்று அலறி அரற்றியவாறு கர்ணன் மாண்டுகிடக்கும் களம் நோக்கி ஓடி வருகிறாள்.

(தொடரும்)


வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை—600 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை—600 002




மயிலை அருள்மிகு வெள்ளீஸ்வரர் ஆலயத்தில் கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் திருப்படிமத் திறப்புவிழா 26-2-88அன்று நடைபெற்றது. அறநிலையத்துறையின் ஆணையாளர் திரு தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் ஒட்டக்கூத்தர் திருப்படிமத்தைத் திறந்துவைத்த இவ்விழாவில் மயிலை குருஜி சுந்தரராம் சுவாமிகள், நீதி அரசர் எஸ்.டி.இராமலிங்கம், டாக்டர் எஸ்.விசுவநாத சிவாச்சாரியார், டாக்டர் வை.இரத்தின சபாபதி ஆகியோர் கலந்து கொண்டனர். ஒட்டக் கூத்தர் சிலையினை ஆலயத்திற்கு வழங்கிய திரு ஏ.வி. இராமநாதனாருக்கு அறநிலையத்துறை துணை ஆணையாளர் திரு ந.ச.இராமச்சந்திரன், பி.ஏ.பி.எல்., பொன்னாடை போர்த்தினார். அறங்காவலர் குழுத் தலைவர் திரு பி. எஸ். சாம்பசிவம் அனைவரையும் வரவேற்றார்.









அருள்மிகு பார்த்தசாரதி ஆலயத் திருக்குளத் திருப்பணி நிறைவேறியதற்குப் பிறகு தெப்போற்சவம் அண்மையில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அறநிலையத்துறை ஆணையாளர் திரு தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ்., இணை ஆணையாளாகள் திரு ம. சூரியராஜ், பி.ஏ.பி.எல்., இரா. தண்டபாணி, பி.எஸ்சி.பி.எல்., ஆலயத்தின் செயல் அலுவலரும் உதவி ஆணையருமான. திரு கருப்பத்தேவன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.